## குமாரசூரியர் வளர்க்கும் 'இலக்கியம்'

''1970ம் ஆண்டு இலக்கியத்துறையில் நாம் விதைப்பு செய்தோம். அதற்கான 'அறுவடை' இப்போதுதான் நடைபெறுகிறது என்பதற்கு ''கீதா'' வின் இந்த ஓராண்டு நிறைவு விழாவே தக்கசான்றாகும்.''

—'கீதா' என்ற சினிமாப் பத்திரிகையின் ஓராண்டு நிறைவு விழாவில் செல்லையா குமாரசூரியர் பேசியது)

—(ஆதாரம்-ஈழமணி 1.5 74,


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 50

வள்ளுவர் ஆண்டு 2005, சித்திரை 22உ (5-5-74) ஞாயிறு ஏப்ரல் 4] ரபீஉல் ஆகிர் 12 -புத்தகம் 27 இதழ்-36


# மே-22 துக்கநாள்

## தமிழர் கூட்டணி முடிவு!

தமிழ் பேசும் மக்களை இரண்டாந்தர அடிமை நிலைக்கு தள்ளியிருக்கும் புதிய குடியரசு அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த மே 22ம் நாளை தமிழினத்தின் தேசிய துக்க நாளாக அனுட்டிப்பது என்று தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது.

புதிய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்து மே 22ம் நாளன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்டனக் கூட்டங்களை நடத்துவதென்றும் தமிழர் கூட்டணி முடிவு செய்திருக்கிறது.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் குடியரசு தினமான 22ம் திகதி தமிழ் இனத்தை அடிமைகளாக்கும் புதிய அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டு முகமாக மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட தலைநகரங்களில் அன்றைய தினம் தமிழர் கூட்டணி கண்டனக் கூட்டங்களை நடத்தும் இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு கூட்டணிப் போராட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழர் கூட்டணி சிங்களக் கட்சிகள் எதனுடனும் கூட்டுச் சேராமல் தனியாகவே இயங்க வேண்டுமென்றும், பாராளுமன்ற நடவடிக்கைகளில் மட்டும் ஏனைய எதிர்க் கட்சிகளோடு சேர்ந்து இயங்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் கூட்டணியின் அடுத்த நடவடிக்கைக் குழுக் கூட்டம், மே 18, 19ம் திகதிகளில் திருக்கோணமலையில் நடைபெறும்

## வாசகர்களுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள்!

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலாக 'சுதந்திரன்' கடந்த 27 ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருப்பதை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

எத்தனையோ இன்னல்கள், தொல்லைகள், இவற்றுக்கு மத்தியில்; வாசகப்பெருமக்களாகிய உங்களது ஆதரவினாலும் — நிரந்தரமாக விளம்பரம் தந்துதவும் ஒரு சில விளம்பரதாரர்களினது ஒத்துழைப்பினாலும் 'சுதந்திரன்' வெளிவந்து கொண்டிருக்கிறது.

மிகுந்த கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் மத்தியிலும் தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்கு உழைப்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு, வேறு எவ்வித லாபத்தையும் எதிர்பார்க்காது சுதந்திரனை நடத்திவருகிறோம்.

அண்மைக் காலமாக, பத்திரிகைத்தாள் விலை அதிகரிப்பு—பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு, தொழிலாளர்களின் சம்பள உயர்வு, போன்ற காரணங்களினால், பத்திரிகை உற்பத்திச் செலவு எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டது.

இதன் காரணமாக போதிய வசதியும் வாய்ப்பும் உள்ள நாளேடுகளே செய்வதறியாமல் திகைக்கின்றன. திடீர் திடீரென்று விலையை அதிகரித்தும் வருகின்றன.

இந்நிலைமை சுதந்திரனை எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

ஆனாலும், ஏராளமான வாசகர்கள் என்ன வந்தாலும் சுதந்திரனை மட்டும் நிறுத்திவிடாதீர்கள்; விலையை வேண்டுமானால் இன்னும் அதிகரியுங்கள்; ஒரு ரூபாவாக சுதந்திரன் விலையை உயர்த்தினாலும் நாங்கள் வாங்கத்தயார் என்று எழுதியிருக்கிறார்கள்.

வாசகர்களாகிய நீங்கள் சுதந்திரன் மீது வைத்திருக்கும் பற்றும் பாசமும் நம்மை மெய்சிலிர்க்கவைக்கிறது

எனவே தவிர்க்க முடியாத சூழ்நிலையில்—சுதந்திரன் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இவ்வாரத்திலிருந்து சுதந்திரன் பிரதியொன்றின் விலையை ஐம்பது சதமாக உயர்த்தியிருக்கிறோம்.

எமது கஷ்டத்தைப் புரிந்துகொண்டு, வாசகர்கள் தொடர்ந்தும் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குவார்கள் என்று மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

சுதந்திரன் இனி ஒவ்வொருவாரமும் 10 பக்கங்களில் வெளிவரும். பத்திரிகை அச்சிடும் 'நியூஸ் பிரின்ட்' காகிதம் போதியளவு நியாய விலையில் கிடைக்கும்போது சுதந்திரன் பக்கங்கள் மேலும் நிச்சயமாக அதிகரிக்கப்படும் என்ற உறுதியையும் வாசகர்களுக்கு தர விரும்புகிறோம்.

—நிர்வாகி,
சுதந்திரன்.

## சிங்களவர்களால் ஆளப்படுவதை ஒருபோதுமே ஏற்கோம்!

### 'வாஷிங்டன் போஸ்ட்' நிருபருக்கு தந்தை செல்வா அளித்த பேட்டி

'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பிரபல அமெரிக்க செய்தி ஏட்டின் தென் ஆசிய நிருபர் லூயிஸ் எம். சைமன்ஸ் என்பவருக்கு தந்தை செல்வா அவர்கள் அளித்த பேட்டியொன்று அண்மையில் அவ்விதழில் வெளியிடப்பட்டிருந்தது. அதை சுதந்திரன் வாசகர்களுக்காக அப்படியே கீழே தருகிறோம்:-

'பிரிவினையைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை. சிங்கள மக்களால் ஆளப்படுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்'

—'இவ்வாறு அந்தக் கிழவர் தனது கடைசியான முடிவை அறிவித்தார்: காய்ந்த சருகைப்போன்று தளரும் பலமுமற்றிருந்த அவருடைய ஒவ்வொரு சொல்லும் மிகுந்த பிரயாசையுடனேயே வெளிவந்தன

'பார்க்கின்சன் வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்த அவருடைய குரல் கேட்க முடியாத அளவில் மிகவும் மெதுவாக இருந்தது. அப்படியிருந்தும் 21 லட்சம் மக்களின் வழிபாட்டுக்குப் பாத்திரமான தனிப்பெருந் தலைவராக விளங்கி வருகிறார் அவர். அவரைப் பின்பற்றுகின்றவர்கள் அவரை "ஈழத்துக் காந்தி" என அழைத்து வருகின்றனர். அவர்தான் சாமுவேல் செல்வநாயகம்.



'அவருக்கு இப்பொழுது 75வயது ஆகின்றது. இந்த வயதிலும் அவர் அரசாங்கம் தமிழ்ச் சிறுபான்மை இன

(2-ம் பக்கம் பார்க்க)

## மகேந்திரன் மீது வழக்கில்லை!

'மே 22' நாளை வெளியிட்டதற்காக கடந்த 1973 ஜூன் மாதம் கைதுசெய்யப்பட்டு கடந்த 11 மாதங்களாக நீர்கொழும்புச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் திரு. சி. மகேந்திரன் மீது வழக்கு எதுவும் போடுவதற்கு சாத்தியமில்லையென்று அவர் மீது விசாரணை நடத்திய சி. ஐ. டி. அதிகாரிகள் திட்டவட்டமாக கூறிவிட்டதாக அறியப்படுகிறது. வழக்குப்போட முடியாதபோதும் மகேந்திரனை விடுதலை செய்யாது தொடர்ந்தும் சிறைக்குள் பூட்டிவைத்திருக்கிறது சிங்கள ஆட்சி!

## ஈழத் தமிழர் போராட்டங்களுக்கு பாரிஸ் தமிழ்ச் சங்கம் ஆதரவு!

ஈழத் தமிழர்களின் எந்தப் போராட்டத்துக்கும் பாரிஸ் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவு என்றும் உண்டு என்று பாரிஸ் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. நசீர் அவர்களும் செயலாளர் திரு. தசரதன் அவர்களும் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கத்திடம் இலண்டனில் வைத்து உறுதியளித்தனர்.

சாமன் வெளித் தார் ஒரு மாநில சங்கத்தின் ஒருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக அண்மையில் திரு. தர்மலிங்கம் இலண்டன் சென்றிருந்தபோது அங்கு திரு. தர்மலிங்கத்தை சந்தித்து, ஈழத்தமிழர்களின் நிலைமை பற்றி உரையாடிய பாரிஸ் தமிழ்ச் சங்கத்தினர் மேற்கண்ட உறுதி மொழியை வழங்கினர்:

திரு. தர்மலிங்கம் இலண்டனில் தங்கியிருந்தபோது அவருக்கு இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர் வரவேற்பு விருந்தொன்றை அளித்துக் கௌரவித்தனர். லண்டனில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள 'வளரி ஈழம்' எனும் ஸ்தாபனமும் திரு. தர்மலிங்கத்துக்கு விருந்தளித்துக் கௌரவித்தது.

தென் மேற்கு லண்டனிலுள்ள விம்பிள்டன் ஜன சமூக நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள லண்டன் தமிழ்க்கல்லூரியையும் திரு. தர்மலிங்கம் பார்வையிட்டார். விம்பிள்டனில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திலும் விம்பிள்டன் பொதுமண்டபத்தில் நடைபெற்ற சிறீ காளி ஸ்ரீவ பூமன்றத்தின் பங்குனி உத்தரப்பூசையிலும் திரு. தர்மலிங்கம் பங்குகொண்டு உரையாற்றினர்.

பி. பி. சி. தமிழோசைக்கு திரு. தர்மலிங்கம் அளித்த பேட்டியில் தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தமிழனாக வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்தப் பேட்டியை தமிழோசை இயக்குனர் திரு. சுந்தரமூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார்.

—(தகவல் - இலண்டன் முரசு)

# தமிழினத்தின் உயிர் நாடி!

அன்பு நண்பா,

சென்ற சில கிழமைகளாக நம்முடைய தமிழ் விடுதலை இயக்க நண்பர்களிடையே ஒருவித ஏக்கம்-ஒருவித தத்தளிப்பு—வாராது வந்துற்ற மாமணியைப் பறிகொடுத்திடப் போகிறோமோ என்கிற ஒரு தவிப்பு — இவற்றையே என்னால் கண்டிட முடிந்தது.

நான் சென்றவிடமெங்கும் நமது இயக்கத் தோழர்கள் — துடிப்புள்ள இளைஞர்கள்—தமிழுணர்வு கொண்டோர்—என்னைச் சூழ்ந்து கொண்டு கவலையோடு கேட்ட கேள்வி — "நாங்கள் கேள்விப்பட்டது உண்மைதானா?" என்பதுதான்! எழுச்சி மிக்க உங்கள் எழுத்துக்களை இனிப்படித்திடும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திடாதா? நம்முடைய உரிமைக்குரல் இனி ஒலிக்காது என்று வந்திட்ட செய்தி உண்மைதானா அண்ணா? என்று ஏராளமான தம்பிகள் நேரிலும், தொலைபேசி மூலமும் கவலை தோய்ந்த நெஞ்சினராக கேட்டு வந்தனர்.

இன்னும் பல ஆர்வமிக்க தமிழ் அன்பர்கள்—எதுவரினும் — என்ன நேர்ந்திடினும் — ஏட்டை மட்டும் நிறுத்திவிடாதீர்; அதுவே தமிழ் சமுதாயத்தின் உயிர்த்துடிப்பு; விலையை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்துங்கள்—வாங்கிடத் தயாராக இருக்கிறோம் — ஆனால் ஏடு தொடர்ந்துவெளிவர ஆவன செய்யுங்கள்—என்று எழுதிவந்தனர்.

நம்முடைய இயக்க நண்பர்களும் — தமிழின விடுதலை உணர்வு கொண்டோரும் — தமிழ்த் தேசிய வாதிகளும் எவ்வளவு தூரம் வேதனையும் கவலையும் ஏக்கமும் கொண்டோராய்க் காணப்பட்டனரோ, அதேயளவு அல்லது — அதையும்விட களிப்பும் மகிழ்ச்சியும் கொண்டோராய் தமிழ்ப் பகைவர்கள் வெற்றி உலாவந்தனர்; தங்கள் ஏடுகளில் இதுதான் சமயம் என்று நம்மைத் திட்டுதிட்டென்றும் திட்டித்தீர்த்தனர்!

அற்பர்கள்,

முதலாளிகள்,

தரங்கெட்டதுகள்,

ஆதரவற்றோர்

என்றெல்லாம் ஏளனம் பேசினர்; தங்களுக்கேயுரிய "நரகல் நடையில்" நாராசம் பாய்ச்சினர்; நகைத்துக் கிடந்தனர்.

நண்பா, அரசாங்க 'கெசட்' ஆக இப்போது வெளிவரும் நாளேடு ஒன்றில் '......வரனைத்திட்டியவர் தெருவில்' என்ற தலைப்பிட்டு என்னைக் கேலி செய்திருந்தனர். நான் தெருவில் நிற்கவேண்டுமென்பதில் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை பார்த்தாயா? அதனைப்பார்த்துவிட்டு "வாழ்க அவர்களின் நல்ல மனம்" என்று எனக்குள் வாழ்த்திக் கொண்டேன்!

தான் பாடுபட்டு உழைத்துச் சேர்த்த பல இலட்சம் ரூபாய்களை பார்த்துப்பாராது — தமிழ் சமுதாயத்துக்காக அள்ளி இறைத்து அதன் பயனாக இன்று நொடிந்து போயிருக்கும் ஈழத்தமிழர் தந்தை செல்வாவை — 75 வயதிலும் தான் ஏற்றுக்கொண்ட இலட்சியத்துக்காக தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தூக்கியெறிந்த தியாகத்திரு விளக்கை—'முதலாளி' செல்வநாயகம் என்று வாய் கூசாமல் திட்டித் தீர்த்தார்கள்.

இப்படித் திட்டித்தீர்த்தவர்கள் யார்? தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதாக கூறிக்கொண்டு — வாயளவில் சோசலிசம் பேசிக்கொண்டு — அதே தொழிலாளர்களை ஏணியாகப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றி — இன்றைக்கு அந்த அதிகாரத்தைக்கொண்டு தங்கள் சொந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெருக்கிக்கொண்டு—மாடி வீடுகளில் வாழ்ந்து கொண்டு — "பென்ஸ்" கார்களில் பவனிவந்து, 'நைட்கிளப்'புகளில் ஜாலியாகப் பொழுது போக்குபவர்கள்தான் — வர்க்கபேதம் பேசி தங்கள் சொந்த வாழ்வைவளமாக அமைத்துக் கொண்டவர்கள்தாம் — தமிழ் சமுதாயத்துக்காக தன்னுடைய செல்வம் அனைத்தையும் அர்ப்பணித்த தந்தை செல்வாவை "முதலாளி" என்று நாக்கூசாமல் எழுதுகிறார்கள்!

நண்பா, நம்மவருக்கு கவலையையும் மாற்றார்க்கு களிப்பையும் தந்திட்ட அச்செய்தி என்ன என்பது உனக்கு இதுவரையில் புரிந்திருக்கும்! சுதந்திரன் ஏட்டை தந்தை செல்வா நிறுத்தப் போகிறார் என்று சில ஏடுகளில் வெளிவந்திட்ட செய்திதான் அது!

## அரசியல் மேடை

சுதந்திரன் நிறுத்தப்பட போகிறதா? அந்தகாரமாய இருக்கும் தமிழர் வாழ்வில் ஒரேயொரு ஒளிவிளக்காக இருந்திடும் சுதந்திரனும் அணைந்துவிட்டால் நம் நிலையென்ன? என்று துடித்து பதைத்துக் கேட்டு நின்ற நண்பர்களுக்கு நான் சொன்னது இதுதான்!—

'சுதந்திரன்' என்பது ஒரு சாதாரண ஏடு அல்ல; அது ஒரு பெரிய தத்துவம்! ஒரு சமுதாயத்தின் மாபெரும் அரசியல் இலட்சியம்! சாதி பேதம், வர்க்க பேதம், மதபேதமற்ற—விடுதலைபெற்ற தமிழ் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற புனிதமான கோட்பாடு—இவற்றின் மொத்த வடிவம்தான் சுதந்திரன், சுதந்திரன் விதைத்துவந்த கோட்பாடுகளும் குறிக்கோள்களும், இலட்சியங்களும் தத்துவங்களும் தமிழ் மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருக்கின்றன; எனவே தமிழ் சமுதாயத்தின் உயிரோட்டமான 'சுதந்திரன்' என்றென்றும் வாழும்; அது அழியாவரம் பெற்றது!

இவ்வாறு நான் கூறியது முற்றிலும் தமிழ் மக்கள் மீது நான் கொண்டிருந்த அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கையினால்தான். ஏனெனில் 'சுதந்திரன்' தமிழ் மக்களின் இதயதாகம்—இலட்சிய மூச்சு என்பதை நான் நன்கு அறிந்தவன்!

சுழிபுரம், குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தம்பி வ. ஸ்ரீகாந்தன் எனக்கு எழுதியிருக்கும் கடிதமொன்றில் தன்னுடைய உணர்வைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்:—

"தங்கத் தமிழின் சிறப்பையும் தமிழின் பண்பையும் பறைசாற்றி வரும் 'சுதந்திரன்' தமிழ்மகனான எனது கரத்தில் கிழமைதோறும் தவழும் பத்திரிகையாகும். 'சுதந்திரன்' கிடைக்கவில்லையென்றால் — என் உயிரே ஊசலாடுவதுபோல ஏங்குகிறேன் — ஏன்? இந்த வினாவுக்கு விடை கிடைக்கவேயில்லை........"

இதோ மற்றோர் தம்பி—கொழும்பு புதுச் செட்டித் தெருவில் வசிப்பவர் — இரத்தின வடிவேல் எழுதியுள்ள கடிதம் —

சுதந்திரன் வெளிவராது விடுமாயின்...... ஐயகோ நினைக்கவே முடியவில்லை. ஆட்சியாளரின் அத்துமீறிய துரோகச் செயல்களையும் எடுபிடிகளின் ஏமாற்று வித்தைகளையும் யார் அம்பலப்படுத்துவது?

"இ. போ. ச. சேரிடப் பலகையின் பின்னால் நடந்த குட்டையும், திரைப்படக் கூட்டுத்தாபனத்தினரின் கழுத்தறுப்பையும் பொது மக்களுக்கு அம்பலப்படுத்த யார் உளர்?

"இருப்பதெல்லாம் தேசிய (?) தினசரிகள்; தமிழர் பிரச்சினைகள் பற்றி எழுதினால் நாம் குறுகிய மனப்பான்மை கொண்டவராகிடுவோம் என்று அரசுக்கும் அடிவருடிகட்கும் வக்காலத்து வாங்கும் தினசரிகளை எப்படி நாம் நம்ப முடியும்? அவர்களின் கெடுபிடி மேலோங்கிடத்தான் இது வழி வகுக்கும்.

'எனவே இந்நாட்டில்வாழும் தமிழ்பேசும் மக்கள் சகலரினதும் சார்பாக உருக்கமுடன் வேண்டுகிறேன்: உறங்கிடாதீர். விழிப்புடனிருந்து எம்மினத்தை அழிவுப் பாதையினின்றும் காத்திட 'சுதந்திரனை'த் தொடர்ந்தும் வெளியிடுக!'

நண்பா, இவ்வாறு எனக்கு வந்து குவிந்த கடிதங்கள் ஏராளம் ஏராளம். உதாரணத்திற்கு இரு கடிதங்களை மட்டும் மேலே தந்தேன்! நம்முடைய இயக்க நண்பர்களும் எழுச்சிமிகு தமிழ்க்காளையரும், தமிழன்பர்களும் மனம் மகிழ்ந்திடவும்—மாற்றார் மனம் மருட்சியடைந்திடவும் சுதந்திரன் தடங்கல் ஏதுமின்றி தொடர்ந்துவருகிறது — உங்கள் கரங்களில் தென்றலென தவழுகிறது; தமிழ்ப் பகைவருக்கோ அது சண்டமாருதமாகத் தெரிகிறது!

விலை சற்று அதிகம்தான் என்றாலும் — விடுதலை உணர்வும், விஞ்சு தமிழுணர்வும் கொண்ட என் தமிழ் பெருமக்கள், சுதந்திரனைத் தொடர்ந்தும் ஆதரித்திடுவர்—ஒத்துழைப்பு நல்கிடுவர் என்கிற நம்பிக்கை மெத்த எனக்குண்டு!

ஏனெனில் நான் முன்னரே குறிப்பிட்டது போல—சுதந்திரன் வெறும் சாதாரணத் தாள் அல்ல; அது தமிழ்த் தேசிய இனத்தின் இலட்சிய உணர்வுகளின் பிரதிபலிப்பு!

— உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

---

## வாஷிங்டன் போஸ்ட் நிருபருக்கு தந்தை செல்வா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினை அங்கீகரிக்கச் செய்வதற்கு வழிவகுக்கும் வகையில் நாடு முழுவதிலும் இயக்கத்தை நடத்தி வருகிறார்.

'பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா அவர்களின் பலம் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சமயம் இது; இலங்கை, கடன் என்ற படுபாதாளக் குழியின் விளிம்பில் தடம்புரண்டு கொண்டு நிற்கிறது. இந்த நிலைமை அரசாங்கத்தை அரிசிப் பங்கீட்டைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கி, அதனால் நாட்டில் பசி பட்டினியை ஏற்படுத்தியுள்ளதோடு அரசாங்கத்தின் செல்வாக்கையும் பெருமளவில் பாதிக்கின்ற நிலைமையை உருவாக்கியிருக்கின்றது.

'இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையை நாம் எமக்குச் சாதகமாக்கிக் கொள்வது ஒரு வேளை முறையற்றதாக இருக்கக்கூடும். ஆனால் எங்களுடைய கோரிக்கைகள் இந்த நிலை ஏற்படுவதற்கு எவ்வளவோ முன்பே ஆரம்பமானது. அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கின்றது என்று எங்களுக்குத் தோன்றினால் நாம் எமது நடவடிக்கைகளைக் கட்டாயம் தளர்த்துவோம். ஆனால் அரசாங்கம் அப்படி ஒன்றும் செய்வதைக் காணோம்' என்று செல்வநாயகம் கூறினார்.

செழிம்பான இலங்கை நாட்டிலுள்ள ஒரே ஒரு வரட்சிப் பகுதியான வடக்குக் கிழக்கு மாகாணங்களாகிய தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிக்கு சுயாட்சி கேட்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும். தமிழ் மொழிக்கு அரசாங்க அந்தஸ்துப் பெறுவதே அடிப்படை நோக்கமாகும்.

'இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை கொடுக்கக் கூடிய செயலான அழிக்கப் பட்ட அஞ்சற்றலைகளை ஒட்டி அஞ்சல்களை அனுப்புவது, தேசிய தினத்தின் துக்கதினம் கொண்டாடுவது போன்ற தொந்தரவு கொடுக்கும் செயல்களைத் தமிழ் மக்கள் செய்து வந்திருக்கின்றனர். ஆனால், அரசாங்கம் ஒருவரையும் கைது செய்யவுமில்லை; உத்தியோக பூர்வமான முறையில் தம்முடன் பேச்சுவார்த்தைகள் வைக்கவேண்டுமென்று தமிழ் மக்கள் விடுத்த கோரிக்கைகளுக்குப் பதிலிறுக்கவும் இல்லை.

'இலங்கை பிரித்தானிய ஆட்சிக்குட் பட்டு இருந்த பொழுது ஒரு இராணி அப்புக்காத்து ஆகவும் மிகவும் சிறந்த வழக்குரைஞர்களில் ஒருவராகவும் விளங்கிய செல்வநாயகம், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு இப்பொழுது பேட்டி கள் எதுவும் அளிப்பதில்லை. இன்றிருக்கும் கட்டத்தில் எனக்குள்ள ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் முழுமையாகப் பிரசாரப் படுத்த வேண்டும்' என்று அவர் சொன்னார்.

'1958ம் ஆண்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட இனக் கலவரத்தில் இரத்தம் வெள்ளம் ஓடி நாட்டைக் கலக்கிய சம்பவத்தை தனது வீட்டின் திறந்த சாளரத்தில் வைக்கப்பட்டிருந்த பசிசைக் கட்டளை விரிக்கப்பட்ட ஒரு பழைய மேசைக்குப் பின்னாலிருந்து கொண்டு திரு செல்வநாயகம் எடுத்துச் சொன்னார். வன்முறைச் செயல்களைக் கையாளுவதைத்தான் எண்ணிப் பார்க்கவில்லை என்று அவர் உறுதியாகச் சொன்னார். அதோடு, பயங்கரக் குற்றம் செய்ததாகச் சொல்லி அரசாங்கம் 42 தமிழ் வாலிபர்களை நீதி விசாரணை ஏதுமின்றி மறியலில் வைத்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

தேயிலை, றப்பர், கோப்பித்தோட்டங்களில் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து ஆங்கிலேயரால் ஒப்பந்தத்தில் கொண்டு வரப்பட்ட தமிழர்களுட்பட தமிழ் மக்கள் இலங்கையின் 130 லட்சம் சனத்தொகையில், 20 சத வீதமாவர்.

'இதில் பாதிப்பேராளவில் இன்னும் தோட்டங்களில்

(7-ம் பக்கம் பார்க்க)









இடமிருந்து வலம்:— பேராசிரியர் முத்து சண்முகம், டாக்டர் வாசுகி அம்மையார், வண. இராசமாணிக்கம், டாக்டர் சாலே இளந்திரையன், டாக்டர் சாலினி இளந்திரையன், திரு நீலகண்டன், திரு. ரெனட்டோ.

# 13. 'தமிழ் எங்கள் அயர்வுக்கு சுடர் தந்த தேன்'

'வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணத்தை நடத்திப் பார்' என்று தமிழில் ஒரு பழமொழி கூறுவார்கள்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின் பின்னர், இலங்கையில் ஒரு புதுமொழியைப் பயன்படுத்தலாம் என்று நான் நினைக்கிறேன்.

'(உலகத் தமிழ்) மாநாட்டை நடத்திப்பார்—மாநாட்டுக்கு வந்துபார்' என்பதே அந்தப் புதுமொழியாகும்.

மாநாட்டை நடத்திமுடிப்பதற்கு மாநாட்டு குழுவினர் எவ்வளவு தொல்லைகளையும் துன்பங்களையும் சந்திக்க வேண்டியிருந்ததோ, அதே போல மாநாட்டுக்கு வந்து சேருவதற்கு வெளிநாட்டுப் பேராளர்கள் பட்ட துன்பங்களும் எண்ணிலடங்கா.

'விசா' பெறுவதற்காக அவர்கள் நாள்தோறும் தங்கள் தங்கள் நாடுகளிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு அலைந்து திரிந்தார்கள்.

ஏமாற்றமும், அலைச்சலுமே எஞ்சிய போதிலும் தமிழ் மீது அவர்கள் கொண்ட பேரன்பு, அவர்களை சோர்வடையச் செய்யவில்லை.

இலங்கைத் தூதரகம் நாடோறும் கை விரித்தாலும்—அவர்களும் நாடோறும் தூதரகத்தை நோக்கி கால் கடுக்க நடக்கவும் பின் நிற்கவில்லை!

தங்கள் தங்கள் நாடுகளிலிருந்து தொலைபேசி மூலம், இங்குள்ள மாநாட்டு அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு 'விசா' பற்றி கவலையுடன் பேசினார்கள். 1973 டிசம்பர் 31ம் நாளில்தான் அதாவது மாநாடு தொடங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகத்தான் இலங்கை அரசு மாநாட்டுக்கு வருவோருக்கு 'விசா' வழங்கும்படி தனது வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு பணித்தது.

மாநாட்டுக்கென அமெரிக்காவிலிருந்து வந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இலங்கைக்குள் நுழையக்கூடாதென திருப்பி அனுப்பப்பட்ட பேராசிரியர் கிப்மன், உடனடியாக அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றுவிடவில்லை.

தமிழ் அவரை காந்தம் போல இழுத்தது.

சென்னைக்கு சென்று, அங்கிருந்து கொண்டே தமிழ் மாநாட்டுக்கு எதிராக ஈழத்தரசு செய்யும் கொடுமைகளை 'மெட்ராஸ் ஹிந்து' போன்ற உலகஏடுகள் மூலம் அவர் அம்பலப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டில் எப்படியும் கலந்து கொண்டே தீரவேண்டும் என்ற ஆர்வமுனைப்புடன் அவர் செயலாற்றினார்.

அவர் சென்னையில் நடத்திய பிரச்சாரமும், இலங்கை அரசின் பிடிவாதத்தைத் தளர்த்த ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.




பேராசிரியர் கிப்மன் அவர்களுடன் பின்னர் நான் உரையாடிக்கொண்டிருந்தபோது ஈழத் தமிழர்களின் அரசியல் அடிமை நிலையைக் கேட்டுவிட்டு — 'சாதாரண ஓர் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதற்கே இவ்வளவு கெடுபிடி செய்துள்ள சிங்கள அரசிடமிருந்து தமிழர்களாகிய நீங்கள் எவ்வாறு உங்கள் சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள்?' என்று வேதனையோடு கேட்டதை நான் என்றும் மறக்க முடியாது!

கடைசி நேரத்தில் 'விசா' கிடைத்துவிட்டால் மட்டும் போதுமா? இலங்கைக்கு வந்துசேர வாகன வசதி வேண்டாமா?

இதன் பின் வெளிநாட்டுப் பேராளர்கள் விமான நிலையங்களுக்கு நாடோறும் அலைந்து திரிய நேரிட்டது!

'சீட்' இல்லை — இல்லையென்ற கைவிரிப்பு!

மாநாடு நடைபெற்ற நேரத்தில் இந்திய விமான சேவையில் 'வேலைநிறுத்தம்' நடைபெற்றுக் கொண்டிருந்தது: இலங்கை விமானத்திலேயே இந்திய அறிஞர்கள் வந்துசேரவேண்டியிருந்தது.

இலங்கை விமானத்தில் அவர்கள் இடம் பிடிப்பதற்கு பிரமப்பிரயத்தனப்பட்டார்கள்.

இதோ தாங்கள்பட்ட கஷ்டத்தை தமிழகத்திலிருந்து வந்திருந்த இரா. கணேசன் கூறுகிறார் கேளுங்கள்:—

சென்னையிலிருந்து பொறியாளர் கொடுமுடி ச. சண்முகன் அவர் துணைவியார் திருமதி பிரகதம், ஈரோட்டுப் புலவர் செ. இராசு, நான் ஆகநால்வரும் சென்னையிலிருந்து மாநாட்டுக்குச் செல்லத் திட்டமிட்டோம். இலங்கையில் நுழைவதற்கான இசைவாணை (Visa) வேண்டிச் சென்னையிலிருக்கும் இலங்கைத் தூதரகத்தில் விண்ணப்பம் கொடுத்தோம். இலங்கை அரசிடமிருந்து ஆணைவந்தாலொழிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் நுழைவதற்கான இசைவாணையை எங்களுக்கு அளிக்க இயலாதென்று இலங்கைத் தூதரகம் 28-12-73 அன்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

கொழும்பிலிருக்கும் மாநாட்டின் பொதுச் செயலாளரான கோபாலப்பிள்ளை மாதேவாவுடன் உடனே நாங்கள் தொலை பேசியில் தொடர்பு கொண்டோம். அவரும் நாங்கள் நுழைவாணை பெறுவதற்கானவை செய்வதாகக் கூறினார்.

'29-12-27 அன்று Indian Express என்னும் ஆங்கிலச் செய்தித்தாளில் மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும்



அசோக்குமார ராஜப்பன்

வெளி நாட்டறிஞர்களுக்கு நுழைவாணை அளிக்கப்படாதென்றும் அவர்கள் பெயர்கள் இலங்கையிலிருக்கும் எல்லாத் துறைமுகங்களுக்கும் விமான நிலையங்கட்கும் கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அன்னார் இலங்கையில் எங்கு இறங்கினாலும் அவரவர் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவர் என்றும் செய்தி கண்டு திடுக்கிட்டோம்.

மாநாட்டுப் பொதுச்செயலாளர் கோபாலப்பிள்ளை மகாதேவா அவர்கள் இலங்கைத் தலைமையமைச்சரான திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களைக் கண்டு பேசியதாகவும் தலைமையமைச்சர் வெளிநாட்டறிஞர்களுக்கு இலங்கை நுழைவாணை தர இசைந்ததாகவும் 30-12-73 நாளைய இந்து நாளேட்டில் செய்தி கண்டு மகிழ்ந்தோம். உடனே இலங்கைத் தூதரகம் ஓடினோம். நாளேட்டில் செய்தி கண்டதல்லால் அவர்கள் அரசிடமிருந்து எத்தகைய ஆணையும் அதுவரை வந்திலது எனத் தூதரகத்தில் கூறிவிட்டனர். 31-12-73 அன்று காலை மீண்டும் தூதரகம் சென்றோம். இலங்கை அரசிடமிருந்து அப்போது தான் செய்தி வந்ததென்றனர். பகல் 12-30 மணிக்கு இலங்கை நுழைவாணை பெற்றோம்.

2-1-74 அன்று திருச்சியிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் வானூர்தியில் இடம் கிடைக்குமென்றெண்ணி நாங்கள் நால்வரும் சென்றோம். அங்கு ஏமாற்றமே! 3-1-74 அன்று எதிர் பாராவண்ணமாக பெரிய வானூர்தி புறப்பட்டதால் எங்களுக்கும் இடம் கிடைத்தது. அன்று நண்பகல் 12-30 மணியளவில் யாழ்ப்பாணம் அடைந்தோம்.'

இவ்வளவு தொல்லைகளையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டும் அயர்ச்சியடையாது: வெளிநாட்டு அறிஞர்கள் மாநாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள் என்றால் அவர்களை அப்படி இயக்கிய சக்தி எது? தமிழ் மீது அவர்கள் கொண்ட காதல் அல்லவா!

அதனால் தானே 'தமிழ் எங்கள் அயர்வுக்கு சுடர் தந்த தேன்' என்று பாடினார் பாவேந்தர்!

மாநாடு, சனவரி 3ம் நாள் தொடங்கி, 9ம் நாள் முடியுமட்டும் நாள்தோறும் ஒவ்வொரு அறிஞராக வந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த ஒரேயொரு பேராசிரியரான மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முத்து சண்முகம், அலைச்சலைப் பொருட்படுத்தாது கடல் மார்க்கமாக மன்னார் வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நடைபெறப்போவது உலக மாநாடு அல்ல — குறுகிய தமிழ் தின விழாவே என்று மாநாட்டுக்கு எதிரா

**கோவை மகேசன்**

கப் பிரசாரம் செய்த மாற்றார்கள் தலைகுனியும் வண்ணம் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் விபரம் வருமாறு:-

கலாநிதி ஜெனர்ட்—மேற்கு ஜெர்மனி.

பேராசிரியை செல்வி பெரண்டரபெக்—கனடா

கலாநிதி டீல் (Diehl)—சுவீடன்.

பேராசிரியர் கெலர்—சுவிட்சர்லாந்து.

கலாநிதி லெஸ்னிக்—மேற்கு ஜெர்மனி

செல்வி கிலர் புரூஸ்—ஐக்கிய அமெரிக்கா.

கலாநிதி மஜோர் இஸ்வான்—ஹங்கேரி.

கலாநிதி மார் — இங்கிலாந்து.

கலாநிதி இப்மன்—ஐக்கிய அமெரிக்கா.

செல்வி: கதிலின் ஷீலியாரயன்—ஐக்கிய அமெரிக்கா.

வண ஜோசப் விக்கி—இத்தாலி.

வண. பிறைகோம் — சுவீடன்.

டாக்டர். சாலே இளந்திரையன்—புதுடெல்லி இந்தியா.

டாக்டர் சாலினி இளந்திரையன்—புதுடெல்லி இந்தியா.

டாக்டர் வாசுகி அம்மையார் - புதுடெல்லி, இந்தியா.

டாக்டர் ரவீந்திர குமார் சேத் - புதுடெல்லி, இந்தியா.

டீ. சா. ரெனட்டோ - கோவா, இந்தியா.

வண. இராசமாணிக்கம்-தமிழ்நாடு, இந்தியா.

பேராசிரியர் முத்து சண்முகம் - தமிழ் நாடு.

பேராசிரியர் நயினா முகம்மது - தமிழ் நாடு.

புலவர் செ. இராசு-தமிழ் நாடு.

கொடுமுடி சண்முகம் - தமிழ் நாடு.

இரா. கணேசன் - தமிழ் நாடு.

வி. முத்துக்குமாரசாமி இங்கிலாந்து.

மாநாட்டில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் விபரம் வருமாறு:-

திரு. பெரியசாமி-தமிழர் இயக்க அமைப்பாளர், சிங்கப்பூர்.

திரு. என். நீலகண்டன் - செயலாளர் பெங்களூர் தமிழ் சங்கம், இந்தியா.

திரு. இல. நாகமுத்து - தென் ஆபிரிக்கா.

திருமதி அ. சோதிநாதன் - தென் ஆபிரிக்கா.

திரு. அ. சோதிநாதன் - தென் ஆபிரிக்கா.

திருமதி பிரகதம் சண்முகம் - தமிழ் நாடு, இந்தியா.

திருமதி. ஏ. சி. டீல் - சுவீடன்.

மலேசியாவிலிருந்து மலேசிய திராவிடர் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் கே. ஆர். ராமசாமி தலைமையில், டி. எஸ். ரங்கசாமி, டி. ஜேம்ஸ், டி. பரமசிவம், பி. முருகையா, ஆர். சின்னப்பன், கே. ஆர். சோலை அழகு, பி. ஜெயக்குமாரன், எல். அழகிரிசாமி, கே. வேலாயுதம், ஆகிய 10 பேர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

(7-ம் பக்கம் பார்க்க)








வண. பிறைகோம், பேராசிரியர் செலர், கலாநிதி மஜோர் இஸ்வான், கலாநிதி டீல், திருமதி. டீல், கலாநிதி லெஸ்னிக்

## எண்ணம்

# மாநில சுயாட்சி

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்த போது நிறைவேற்றப்பட்ட இருமொழித் தீர்மானத்தின் பின்னர் - அதாவது இந்தி மொழி ஆதிக்க ஒழிப்புத்தீர்மானத்தின்பின்னர் - தமிழக மக்களின் உள்ளத்து உணர்வுகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கின்ற மற்றோர் தீர்மானம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதுதான் - மாநில சுயாட்சித் தீர்மானமாகும்.

மாநிலங்கள் சுயாட்சியை அனுபவிக்கக்கூடியமுறையில் - வகையில் - இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்; மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தீர்மானமாகும்.

தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்திய உபகண்டத்திலுள்ள மொழி வழிப்பட்ட பல்வேறு தேசிய இனங்களினதும் நியாயமான அபிலாஷைகளுக்கு தகுந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

தமிழ் நாட்டின் அரசு கட்டிலில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகம், கொண்டு வந்திருந்த இத்தீர்மானத்தை தமிழ் நாட்டிலுள்ள ஏனைய எதிர்க்கட்சிகள் அரசியல் மாச்சரியம் காரணமாக எதிர்த்து நின்ற போதிலும் — நாளை அதே கட்சிகள் ஆட்சிக்கு வருமானால் - மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்தேவை என்றகூற்றை நிராகரிக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

தமிழ் நாடு சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றபோது - அண்ணா திமுக ஆட்சிக்குவந்தால் - மாநில சுயாட்சித்தீர்மானத்தை கொண்டு வருவீர்களா என்று டாக்டர் ஹண்டேயிடம் முதல்வர் கருணாநிதி கேட்டபோது - ஆம், கொண்டு வருவோம் என்று டாக்டர் ஹண்டே கூறியிருக்கிறார். நீங்கள் அப்படி தீர்மானத்தைக் கொண்டு வந்தால், நாங்கள் அதை ஆதரிப்போம் என்று முதல்வர் கருணாநிதி அதற்கு பதிலளித்திருக்கிறார்.

ஆகவே மாநில சுயாட்சிக் கொள்கையில் தி. மு. க. வுக்கும் அ. தி. க. வுக்கும் அடிப்படைக் கருத்துவேறுபாடு இல்லாத போதிலும், தி. மு. க. கொண்டு வந்த தீர்மானத்தை தனிப்பட்ட வேறு சில அரசியல் காரணங்களுக்காகவே அண்ணா தி. மு. க. ஆதரிக்கவில்லையென்பது தெளிவாகிறது.

எது எப்படியிருந்தபோதிலும் — தமிழக மக்களின் ஒன்றுபட்ட உணர்வுகளை மாநில சுயாட்சித் தீர்மானம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது. இந்த உணர்வுகளை இந்திய அரசு அலட்சியம் செய்வது, இந்திய உபகண்டத்தின் எதிர்காலத்துக்கு ஒருபோதும் நன்மை பயப்பதாகாது.

அந்நிய ஆதிக்கத்திடமிருந்து விடுதலைபெற்ற ஒரு நாட்டில் வாழுகின்ற பல்வேறு மொழிபேசும் மக்களிடமும்—பல்வேறு இனங்களிடமும்—நாம் மற்றோர் இனத்தினரால்—மற்றோர் மொழிக் குழுவினரால் — அடக்கிவைக்கப்படுகிறோம் — நசுக்கப்படுகிறோம் — என்கிற உணர்வுகள் வளருமானால் அந்த நாடு சிதறிச் சின்னாபின்னப்பட்டுப் போவதற்கு நீண்டகாலமாகாது.

தேசிய இனங்களின் இத்தகைய நியாயமான உணர்வுகளை அடக்குவதற்கு வழி — துப்பாக்கியும் இராணுவமும், அடக்குமுறையும் அல்ல; தாம் நசுக்கப்படுவதாக— அடக்கியொடுக்கப்படுவதாக — உள்ளம் குமுறும் மக்களை அழைத்துஅவர்களுடன் சமாதானமாகப் பேசி, அந்த மக்களின் குறைபாடுகளைக் களைந்து — அவர்களது அச்சங்களைப்போக்குவதே சிறந்த ஜனநாயக அரசுக்கு அழகாகும்; அதுவே அரசியல் தர்மமாகும்.

இந்திய உபகண்டத்தில் மாநில உணர்வுகள் பரவலாக- ஆனால் வேகமாக—வளர்ந்துவருகின்றன. இது இயல்பானது. இந்த உணர்வுகளை மதித்து — மிகவும் நிதானத்துடன் இந்திய அரசு செயற்படவேண்டும்.

இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரை—மாநிலங்களின் உணர்வு என்பது மொழிவழி இனங்களின் உணர்வுதான். மொழியடிப்படையில்தான் அங்கு மாநிலங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

எனவே மொழிவழித் தேசிய இனங்களின் உரிமை உணர்வை - சுயாட்சி அபிலாஷையை — இந்திய மத்திய அரசு மதித்து — மாநிலங்களுடன் இதுசம்பந்தமாக ஒரு சமரசத்துக்கு விரைவில் வந்தாகவேண்டும். மாநிலங்களை மத்திய அரசு ஆட்டிப்படைக்கிறது; மாநிலங்களின் உரிமைகளில் தலையிடுகிறது; என்கிற குறைபாடுகள் களையப்பட வேண்டும் 'இதில் இந்திய அரசு தயக்கம் காட்டுமேயானால், நியாயமான மாநில சுயாட்சிக் கோரிக்கையை அலட்சியம் செய்யுமேயானால்—மறைந்துபோன பிரிவினை உணர்வுகள் மீண்டும் இந்தியத் துணைக்கண்டத்தில் தலை தூக்குகின்ற அபாயத்துக்கு இடமுண்டு.

இந்தியத்துணைக் கண்டம் பிளவுபடாத பலம் பொருந்திய ஒரு நாடாக விளங்கவேண்டும் என்பதே நமது பெருவிருப்பமாகும்!

# மொழி வழி ஒன்றுபட்டு உரிமைகளுக்காக உழைப்போம்!

## தமிழ்த் தொழிலாளர்களுக்கு தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் மே நாள் அறைகூவல்!

'உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான தொழிலாளர்களின் உரிமைகளுக்கு போராடும் பழைய மரபை நினைவூட்டும் மேதினம் மீண்டும் ஒருமுறை வந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக மே தினமானது இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்தினரை பொறுத்தமட்டில், ஒருநாள் கொண்டாட்டமாகவும், வரலாற்று நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும தினமாகவும் மாத்திரமே உள்ளது. சென்ற மாதங்களின் நிகழ்வுகளான எரிபொருள் கட்டுப்பாடு, அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தீவிர விலையேற்றம் ஆகியன பொதுவில் எல்லோரையும்- குறிப்பாக வருமான உயர்ச்சியும், தொழில் உறுதிப்பாடும் அற்ற தமிழ் ஊழியர்களை படுகுழியில் தள்ளிவிட்டது.

பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நாடுகளில் எல்லாம் ஒருதலைப்பட்சமான வருமானத்தை கட்டுப்படுத்தவதினாலும், தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக்கூடிய அளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதினாலும், தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினர்களின் தேவைகளை வெற்றிகரமாகச் சமாளித்துவருகின்றன. இதனால் பசிக் கொடுமையும், அதனால் சம்பவிக்கும் மரணங்களும் தொழிலாள வர்க்கத்தினர்க்கு மாத்திரம் உரியதாக இருப்பதில்லை. ஆயின் இந்நாட்டிலோ, படு பிற்போக்குவாதக் கொள்கைகளையுடைய சில தொழிற்சங்கங்கள் தமது இவ்வாத நடவடிக்கைகளினால் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த ஊழியர்களை தொழிற்துறையில் இருந்து வேருடன் களைந்தெறிய முனைந்துள்ளன.

போட்டிப் பரீட்சைகளிலும், தொழில் உயர்ச்சியிலும், தொழில் உறுதிப்பாட்டிலும் எமது தொழிலாளர்கள் நாளிலும் பொழுதிலும் அடைந்துவரும் இடர்ப்பாடுகளை நாம் தெளிவாக அறிந்துள்ளோம். இவைகள் எல்லாம் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. முற்றிலும் அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டிய விடயம்.

எமது பிரச்சினைகள் வர வர நெருக்கடியானதாகவும், சிரமமானதாகவும் வந்துகொண்டிருக்கும் இக் கூட்டத்தில் தமிழ் பேசும் ஊழியர்கள் அனைவரையும் எமது கூட்டணியில் உறுப்புரிமைச் சங்கங்களில் சேர்ந்து உரிமைக்கு போராடுமாறு அழைக்கின்றேன். என்றுமில்லாத மிக மோசமான நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில் தமிழ் பேசும் தொழிலாளர்களது ஒற்றுமையின் இன்றியமையாமையை உணர்ந்து ஐக்கியப்படுமாறு எமது சகோதரர்களையும் சகோதரிகளையும் வேண்டிக் கொள்கின்றேன்.

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியில் இணைந்திருக்கும் தொழிற்சங்கங்களின் எல்லா உறுப்பினர்களையும், புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு தமிழ்பேசும் தொழிலாளர்களின் ஐக்கியத்தை உருவாக்கும் எமது நேர்மையான முற்போக்கு நடவடிக்கைகள் அனைத்திற்கும் கைகொடுத்து உற்சாகத்துடன் உழைக்குமாறு விண்ணப்பிக்கின்றேன். இந்த வழியினால் —இந்த ஒரே வழியினால் மாத்திரமே, இந்நாட்டில் உள்ள தமிழ் பேசும் தொழிலாளர்களது பாரிய இலட்சியங்களாகிய தொழிலுரிமை, சுதந்திரம் ஆகியவற்றை நாம் அடைய முடியும்.'

—இவ்வாறு மே நாளையொட்டி தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி விடுத்திருந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## ஈழத்தமிழன் சாபம்!

ஈழம் தமிழகம் எனுமிரு நாட்டிடை
ஓலம் இடுமோர் உப்புக் கடலே!
இந்நாள் இடிநிகர் அலைக்குரல் எழுப்பி
என்னதான் நாரூய் நீ இரைந்தாலும்
கோடிக் கரங்கள் ஒருநாள் உன்னை
மூடித் தமிழ்மண் போடுவ துண்மை!
அந்நாள் நினது சாநாள் ஆகும்!
நரங்களெல்லாம் ஈரத்தே பறைகள்
தாங்கி நின்று தாளம் கொட்டுவோம்!
நச்சுக் கடலே! இதுநாள் வரை நீ
பச்சைத் தீங்குகள் எத்தனை படைத்தாய்!
உள்ளத் தோணியில் ஊர்ந்த தலைவனை
கள்ளத் தோணி ஆக்கிக் கனிமகள்
ஈழநாட்டில் எலும்பாய் உருக
காளையைத் தமிழ் நாட்டுக் கனுப்பினாய்!
அலறும் தாயைத் தமிழகத் தமர்த்தி
குழறும் சேயைக் கொழும்பிலே விட்டாய்!
அண்ணன் ஒருவன் தொண்டியில் புலம்ப
தம்பி ஒருவனைக் கண்டியில் வைத்தாய்!
கடலே! உன்னை இனியும் தமிழர்
விடுவார் என்று கருதுதல் வேண்டா!
நின்றன் சாநாள் நெருங்கிவிட்டது!
வெறி அலைக் கரங்கள் வீசும் உன்னை
சிறைசெய் தடக்கி நின்னுயிர் சிதைத்து
மண்ணிடும் நாள்வரை ஓயோம்...
அந்நாள் தமிழர் ஆளுநாள் கடலே!

காசி ஆனந்தன்

## அன்றும் இன்றும்

முன்னெல்லாம் தமிழ் வேந்தர்
முடிபுனைந்தாண்ட நாளில்,
கன்னற் றமிழ்ச் சாறு
கரைந்தொழுகக் கவிபாடி,
பொன்னும், மணியும், பொருளும்
பெற்றனராம் புலவரெல்லாம்,
அந்நாளிற் பிறக்காமல்
இன்று வந்து பிறந்ததனால் —
புண்ணான உளத்தோடு
புரள்கின்ற தமிழ்த்தாயைக்
கண்ணாகக் காக்க வேண்டி
கவி புனைந்த நம் காசி
அண்ணன் தான் பெற்றதுவோ
அரசின் வெஞ் சிறைதானே.

—அ. புராந்தகன்

## யார் செலவு?

திடீர் அமைச்சர் ஒருவர் தனது கட்சிக்காரர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கலந்து கொள்வதற்காக திடீர் திடீரென்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் பறந்து சென்று வருகிறார். தனது கட்சிக்காரர் ஒருவர் சுடப்பட்டதாக செய்தி வந்ததும் சில மாதங்களுக்கு முன்னர் உடனடியாக விமானத்தில் பறந்துசென்று அவரைப் பார்த்தார். அண்மையில் தன் கட்சி அமைப்பாளர் ஒருவரது மரண வீட்டில் கலந்துகொள்வதற்காக விசேட விமானமொன்றில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை 8.30 மணிக்கு சென்று ஒன்பது மணிக்கு அங்கிருந்து புறப்பட்டிருக்கிறார்.

தனது கட்சிக்காரர்களைப் பற்றி அமைச்சர் இவ்வளவு தூரம் கரிசனையோடு இருப்பது பாராட்டக் கூடிய விஷயம்தான்!

ஆனால் அமைச்சரின் விமானச் சவாரிச் செலவுக்கு யார் பொறுப்பு? அமைச்சரின் சொந்தச் செலவா? அமைச்சர் சார்ந்துள்ள கட்சி இந்தச் செலவை ஏற்கிறதா? அல்லது அரசு செலவில்—அதாவது பொது மக்களின் வரிப்பணத்தில்— இந்த உல்லாசச் சவாரி நடைபெறுகிறதா?

இதைத் தெரிந்து கொள்ளவே பொது மக்கள் விரும்புகின்றனர்.

— கொண்டோடி.

# 'இன்றைய தமிழ் ஏற்றம் பெற........!'

''தமிழ் மொழி சீரும் சிறப்பும் பெற்று உயர்ந்தோங்கி வாழவேண்டுமானால், அது ஆளும் மொழியாக மாற வேண்டும்! தமிழைப்பேசுகின்ற தமிழ் இன மக்கள் ஆளும் இனமாக மாறவேண்டும். தமிழினம் அரசியல் விடுதலையை பூரணமாக அனுபவித்து—தனது சொந்தத் தாயகத்தில் யாருக்கும் தலைவணங்காமல் வாழ்ந்து வந்த காலத்திலேதான் தலை சிறந்த இலக்கியங்கள் பல தமிழ் மொழியில் தோன்றியிருக்கின்றன. எனவேதான் இன்றைய தமிழ் ஏற்றம் பெற வேண்டுமானால்—தமிழ் சமுதாயம் விடுதலை பெற வேண்டும்; தமிழர் நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்று நாம் கூறுகிறோம்!

தமிழ் மொழி இந்தியாவில் ஒரு விதமாகவும் ஈழத்தில் வேறு விதமாகவும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் உருமாறிச் சிதைந்து போகாமல், ஒரே சீராக வளர்ச்சியடைய வேண்டும் என்பதே சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் ஆசையாகும்: அதனால்தான் தமிழ் ஈழத்தில் பிறந்த அந்த அறிஞர் தமிழ் நாட்டில் சென்று குடியேறி அங்கு தமிழ்த்தொண்டு ஆற்றி அங்கேயே மறைந்தார். ஈழத்தமிழகமும், இந்திய தமிழகமும் ஒன்றுபட்டே வளரவேண்டும் என்ற கருத்தையே அவரது வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது!

இன்றைக்கு, தமிழகத்துக்கும் ஈழத்தமிழகத்துக்குமிடையே இருந்துவரும் தொன்மை மிகு கலாசார இலக்கிய மொழித் தொடர்புகளை துண்டிப்பதன் மூலம், ஈழத்தமிழர்களை தனியே பிரித்து, அவர்களின் தனித்துவத்தை கெடுத்து, காலப்போக்கில் தமிழ் சமுதாயத்தை அழித்துவிட சூழ்ச்சி நடக்கிறது. இந்த சூழ்ச்சியை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மொழியின் தனித்தன்மையும் தூய்மையும் எந்தக் கட்டத்திலும் காப்பாற்றப்படவேண்டும் பிற மொழிக் கலப்பை தமிழ் மக்கள் அறவே அனுமதிக்கக் கூடாது; தமிழ் மொழிக்குள் வேற்றுமொழிகளை கலக்கவிட்டதனால் அது அடைந்த நட்டம் அளப்பரியது: பிற மொழிக்கலப்பை அனுமதித்ததனால்தான், தென்னகம் முழுவதும் பேசப்பட்டுவந்த தமிழ் மொழி சிதைந்து தெலுங்காகவும் கன்னடமாகவும், மலையாளமாகவும் துளுவாகவும் புதிய மொழிகள் உருப்பெற்றன; தமிழர்கள், மலையாளிகளாகவும், கன்னடியர்களாகவும் தெலுங்கர்களாகவும் இனம் மாறினர். வேற்று மொழி கலப்பு தமிழையும் அழித்து; தமிழினத்தையும் சிதைத்தது;

இதை மனதில் கொண்டுதான் ஈழத்திலும், சிங்கள மொழிச் சொற்கள் தமிழுக்குள் திணிக்கப்படுவதை தமிழினம் ஏற்றுக்கொள்ளக்கூடாது; தமிழறிஞர்கள் இந்த ஊடுருவலை அனுமதிக்கக்கூடாது என்று நாம் கூறி வருகிறோம்.

தமிழ் மொழி அழியாது—என்று சிலர் இன்றைக்கு வரட்டுத்தத்துவம் பேசப்புறப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மொழி ஒரு காலத்தில் உலகாண்ட மொழி. ரஷ்ய ஆராய்ச்சி அறிஞர் ஒருவர் கூட, தமிழனே உலகின் முதல் குடிமகன் என்றும், தமிழே கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றிய மூத்தமொழி என்றும் அண்மையில் கூறியிருக்கிறார்.

தமிழ் மொழி ஒருகாலத்தில் 33 நாடுகளில் பேசப்பட்டு வந்திருக்கிறது. அப்படி உலகாண்ட மொழி, இன்றைக்கு மூன்று நான்கு நாடுகளில் மட்டுமே பேசப்படுகிறதே அது ஏன்? அது எப்படி நேர்ந்தது? ஏனைய 30 நாடுகளிலும் தமிழ்மொழி உருமாறி சிதைந்து அழிந்துதானே விட்டது?

தமிழினத்தை அழித்தால் தமிழ் மொழி அழிந்துவிடும்; தமிழினத்தின் மீது வேற்றுமொழியும் மதமும் கலாசாரமும் திணிக்கப்பட்டால், தமிழ் மொழியும் அழிந்துவிடும். தமிழைப்பேசுகின்ற மக்கள் இனம்மாறும்போது தமிழ்மொழியும் நிச்சயம் அழியவே செய்யும்!

நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சிலாபம், நீர்கொழும்பு பகுதியில் தமிழர்கள் தானே வாழ்ந்து வந்தார்கள்? தமிழ் தானே அங்கு பேசப்பட்டு வந்தது? இன்றைக்கு அங்கு தமிழ் மொழியும் இல்லாமல்—தமிழர்களும் இல்லாமல் போய்விட்டார்களே அது எப்படி? அங்கு வாழ்ந்த தமிழர்கள் அப்படியே நாடு கடத்தப்பட்டுவிட்டார்களா? இல்லையே! அவர்கள் அங்கேயே இன்றைக்கும் வாழுகிறார்கள்—ஆனால் தமிழர்களாக, தமிழ் பெயர்களுடன் தமிழ் மொழியைப் பேசி தனித்துவமாக வாழவில்லை—இனம் மாறி மொழி மாறி, பண்பாடுமாறி, மதம்மாறி, தமிழ் பெயர்களையும் இழந்து — வேற்றினத்தவர்களாக — சிங்கள இனமாக அங்கு வாழ்ந்துவருகிறார்கள். எனவே இங்கு ஈழத்திலே—நூறு ஆண்டுகளுக்கிடையில் நீர்கொழும்பு, சிலாபப்பகுதியில், தமிழ்மொழி அழிக்கப்பட்டுவிட்ட நிகழ்ச்சியை நாமே பார்க்கிறோமே!

எந்த மொழியும் அல்லது இனமும் நிலைத்து வாழ்வதற்கும்—அந்த மொழியும் இனமும் தலைநிமிர்ந்து நிற்பதற்கும்—அந்த இனமும் மொழியும் அடிமை நிலையிலிருந்து மீட்சி பெறவேண்டும்—ஆளும இனமாக ஆளும் மொழியாக, அவை மாறவேண்டும்!

தமிழ் மொழியும் தமிழ் இனமும் இந்நாட்டில் ஆளும் மொழியாகவும், ஆளும் இனமாகவும் மாறும்போது தான் தமிழ் மொழியும் இனமும் ஈழத்தில் தலையெடுக்க முடியும்!''

—(19. 4. 74ல் பருத்தித்துறையில் நடைபெற்ற சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் நினைவு நாள் கூட்டத்தில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசியது.)

# தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியில் இழைக்கப்பட்ட அநீதி!

பல்கலைக்கழக அனுமதி விஷயத்தில் தமிழ் மாணவர்கள் எப்படி ஏமாற்றப்பட்டார்கள் என்பதை சுதந்திரன் ஆசியருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கச்சாய் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த யோ. யோகேஸ்வரன் என்ற மாணவர் விளக்கியுள்ளார். அக்கடிதத்தை இங்கே தருகிறோம். இப்பிரச்சினை சம்பந்தமாக பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களிடமிருந்து மேலும் கருத்துக்கள் கோரப்படுகின்றன. —ஆசிரியர்.

அன்புள்ள ஆசிரியருக்கு,

பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் கண்டித்து எழுதியமைக்கு நன்றி கூறுகிறேன். எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும் அரசுக்குப் பயந்து வாய்மூடி மௌனியாக இருக்கும் போது தாங்கள் மாத்திரம் துணிந்து உண்மையை வெளியிட்டு பத்திரிகை தர்மத்தை நிலைநாட்டியுள்ளீர்கள்.

அரசின் அநீதியான செய்கையினால் பாதிக்கப்பட்டு, இனி என்ன செய்வது என்று திகைத்து நிற்கும், தமிழ் மாணவர்களுள் நானும் ஒருவன். 1973ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சையில் எனது பெறுபேறு 182ம் 352ம் ஆகும். ஜனவரி மாதம் 21ம் திகதியன்று நான் உட்பட எங்கள் கல்லூரியில் (யாழ் இந்துக் கல்லூரி) ஆக 21 பேருக்கு பலகலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானப் பகுதியில் விண்ணப்பப்படிவம் கிடைத்தது. (தரப்படுத்தல் வரமுன்பு இக்கல்லூரியிலிருந்து ஐம்பது அறுபதுபேர் விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக் கழகத்துக்குச் செல்வது வழக்கம்) வழக்கமாக விண்ணப்பப்படிவம் கிடைத்தால் அவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் செல்லத்தகுதி பெற்றுவிட்டார் என்று அர்த்தம். ஆனால் இம்முறை அப்படியல்ல என்று விண்ணப்பபடிவத்தில் குறிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நாம் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுவிட்டோமா இல்லையா என்பதை வெகு விரைவில், அடுத்த கா. பொ. (உ/த)ப் பரீட்சை தொடங்குமுன் அறிவிப்பதாக அப்படிவத்தில் குறிக்கப்பட்டிருந்தது. எமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அதன் பின்பும் நாம் க. பொ. (உ/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

நாம் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி அதிபரிடம் கொடுத்தாகி விட்டது; நாட்கள் நகர்ந்தன ஏரிக்கரைப் பத்திரிகைகளில் பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பற்றி பல செய்திகள் வெளிவந்தன. இம்முறை 3ம் பாடம் சித்தி அடைந்து 4ம் பாடத்தில் 25புள்ளிக்குமேல் எடுத்த அனைவரையும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கும்படி கல்வி அமைச்சர் பல்கலைக் கழக அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டதாகச் செய்திகள் வெளியாயின. இதையடுத்து இன்னும் இது போன்ற பல செய்திகள் வெளிவந்தன. இச்செய்திகள் யாவும் எமக்கு நம்பிக்கை ஊட்டுபவையாகவே இருந்தன.

விண்ணப்பப்படிவம் வந்து 2 மாதங்களுக்கும் மேலாகியது. மார்ச் 28ம் திகதி க. பொ. த. (உ/த)ப் பரீட்சையும் ஆரம்பமாகியது. வெகு விரைவில் எமது முடிவை அறிவிப்பதாகக் கூறியவர்கள் பரீட்சை தொடங்கியும் அறிவிக்கவில்லை, எனவே எனக்கு பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்திருப்பதாக நினைத்தேன்.

ஆனால் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில்தான் பல்கலைக் கழக அனுமதிபெற்றவர்களின் பெயர்கள் வெளியாயின, அதில் என் பெயர் இல்லை. பரீட்சைக்கு முன் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக அறிவித்திருந்தால் நான் பரீட்சை எடுத்திருக்க முடியும். பரீட்சையும் எடுக்கவிடாமல் பல்கலைக் கழகத்தில் இடம் கொடுக்காமலும் செய்துவிட்டார்கள்.

எனக்கு மாத்திரம் இக்கதி ஏற்படவில்லை. எங்கள் கல்லூரியில் A, B, 25 எடுத்த ஒரு மாணவனுக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. இவ்வாறு பல தமிழ் மாணவர் நட்டாற்றில் விடப்பட்டிருக்கிறார்கள். விண்ணப்பப்படிவத்தில் கூறப்பட்ட உறுதிமொழியை நம்பிக்கெட்டவர்கள் இவர்கள். இவ்வாறு உறுதிமொழியை மீறியதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதா என்பதை அறிய விரும்புகிறேன். விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிய அக்காகிதம் என்னிடம் உள்ளது.

அநீதி இழைக்கப்படும் போது தமிழன் அதைச் சகித்துக்கொண்டே இருப்பதா? குட்டக் குட்டக் குனிந்துகொண்டே இருப்பதா? தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழ்ப் பெற்றோர்களோ அன்றி அரசியல்வாதிகளோ ஆக்கபூர்வமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1970ம் ஆண்டு க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள் வந்தபோது அதில் விஞ்ஞானப் பகுதியில் தமிழ் மாணவரே கூடுதலாகச் சித்தியடைந்திருந்தனர்; இதைக்கண்ட சிங்களப்பெற்றோரும் அரசியல்வாதிகளும் கொதித்து எழுந்தனர். விடைத்தாள்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தினர். இதன் பயனாக விடைத்தாள்கள் மீள்பார்வை செய்யப்பட்டன. ஆனால் அதில் தவறேதுமில்லை என நிருபணமாயிற்று. இதன் பின்னரே தமிழ் மாணவரை பல்கலைக்கழகம் புகவிடாமல் தரப்படுத்தல் திட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் தமிழ்ப் பெற்றோரோ தங்கள் பிள்ளைகளுக்கும் கண்கூடாக அநீதி இழைக்கப்பட்டிருக்கும் போது வாய்மூடி மௌனியாக இருக்கின்றனர். சிறு வயதில் அவர்கள் பிள்ளை வகுப்பில் திறமையாக விளங்குவது குறித்து மகிழ்கின்றனர். க. பொ. த. (சா. த.) பரீட்சையையும் அவன் திறமையுடன் பாஸ் செய்கிறான். ஆனால் க. பொ. த. (உ. த) பரீட்சையில் அவன் மட்டந்தட்டப்படுகிறான். பெற்றோரும் இதைக் கண்டு குமுறுகின்றனரே தவிர உருப்படியாக ஒன்றும் செய்வதில்லை

இதே நேரத்தில் தமிழ் மாணவர்களுக்கும் தங்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகளை எதிர்க்க வழி தெரியவில்லை இதற்கு ஒரு தகுந்த தலைமையும் கட்டுக்கோப்பான அமைப்பும் தேவையாகும். மாணவர்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட சக்தி அபரிதமானது; ஆனால் தமிழ் மாணவர்கள் தமது சக்தியைத் தாமே உணராமல் இருக்கிறார்கள்; இதை அவர்களுக்கு உணரவைத்து அவர்களைத் தட்டி எழுப்புவது தமிழ்த் தலைவர்களின் கடமையாகும்.

—அன்புள்ள
யோ. யோகேஸ்வரன்
சாவகச்சேரி.


## ஏழையழுத கண்ணீர்

ஏ...
சிங்கள ஆட்சியே,
மாடாக உழைத்து ஓடாக உருகி.
நிற்கும் மலையகத் தமிழனைப் பார்த்தாயா?
உண்ண உணவின்றி
ஒரு நேரம் வயிறு நிரப்ப வழியின்றி
உருமாறி—நிலைதடுமாறி
நாளுக்கு நாள்
துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கின்றானே
அவன் நிலையைக் கேட்டாயா?
பஞ்சம்தீர வழியேதும் செய்தாயா?
இரண்டு கொத்துச் சொல்லிவந்த ஆட்சியே
நாட்டுக் குழைநதிடுமந்த நல்லவன்
சோற்றுக்கு வழியின்றிக் கூனிக்குறுகி
எலும்பும் தோலுமாக உருக்குலைந்து
காய்ந்து கருவாடாக மாறிப்
பதை பதைத்துச் சாகின்றானே
இந்தக் கதை அறிந்தாயா?
எமது சகோதரனை - நீங்கள்
நாடுகடத்த முன்னர் அவன்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்கோ
நெடுந்தூரம் போய்க் கொண்டிருக்கின்றானே
இந்தச் சங்கதியைக் கேட்டாயா?
நன்றிகெட்ட ஆட்சியே
''ஏழையழுத கண்ணீர் கூரிய
வாளொக்கும்' என்பதுனக்குத் தெரியாதா?
மலையகத் தமிழன் விட்ட கண்ணீர்
என்றோ ஒருநாள் உன்னைப்
பழிவாங்கத்தான் போகின்றது அதுவரை
பார், பார் நன்றாகப் பார்த்துக்கொண்டேயிரு.

—நெடுங்கேணி நவம்.

எமது சிறுகதை

# தியாகச் சுடர்



அந்திமாலையின் அரவணைப்பிலே ஆதவன் மெல்ல மெல்ல அமிழ்ந்து கொண்டிருக்கின்றான். புள்ளினங்கள் தம் கைகளாம் மெல்லிறகுகளை விரைவாக அசைத்து, அசைத்து மெல்லிசை பரப்பித் தம் இல்லமாம் கூடுகளை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன.

இந்த அந்திமாலையின் மயக்கம் மங்கையரின் உடம்பிற்பட்டு உணர்ச்சி என்னும் இன்பப் பூரிப்புக்களைப் பளிச்சிட வைக்கின்றன. ஆடவரின் துடிப்பும், மனநிலையும் அதனோடு கலந்து கதிகலங்கிச் செயலிழந்து நிற்கின்றன. இத்தகைய காந்தச் சக்தியை அந்திமாலையின் அரவணைப்பிலே பன்முறை உணர்ந்தவன்தான் பாலு.

ஆனால்...! அவன் இன்று மட்டும் மாலையின் மயக்கத்திலே மயங்கவில்லை. தன் மனத்துக்குள்ளே மண்டியிட்டுக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் பிழம்பினை வெளியேற்ற வழியின்றிக் கட்டிலிலே புரண்டு கொண்டிருக்கின்றான்.

'அடே! பாலு நீ எதையாவது செய்தாலும் பரவாயில்லை. அந்த ரதியை மட்டும் உன் பணம் இனிமேல் மறந்தும் நினைக்கக் கூடாது. அவ்வளவுதான்' — பாலுவின் தந்தை சுந்தரின் குரல் கணீரெனக் கனன்றது.

ஆம்; உலகத்திலே உண்மைக்கும், நேர்மைக்கும், மானத்துக்கும் எங்கே இடமுண்டு. பொய்மையும், புகழையும், அவநம்பிக்கையையும் கோபுரமாகக் குவித்து வாழும் மனிதக்கும்பலுக்கு எங்கே உண்மை துலங்கப் போகின்றது'. பாலுவின் அடிமனத்திலிருந்து எழுந்த உணர்ச்சிக் குமுறலுடன் ஒரு பெருமூச்சும் இலேசாகக் கிளம்பி அமைதியாக அழிகின்றது.

'அடியே! கமலா. உன் மகனை நீ நல்லவனாக உயிரோடுகாண ஆசைப்பட்டால் அந்த ரதியின் பக்கம் தலைவைக்க வேண்டாமெனச் சொல்; அவ்வளவுதான்' அடுத்த பேச்சுக்கே இடமில்லாமல் எங்கோ நடந்து கொண்டிருக்கின்றார் சுந்தர்.

கமலாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடி நிலத்தைத் தாவி அணைக்கின்றன. வாடிய முகமும், ஒட்டிய உடலுமாக உருக்குலைந்து அவள் அலைமோதுகின்றாள் ஐந்தாறு நாளாக.

ஆமாம், பாலு ரதியைப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட விவகாரம் தெரிந்ததும் அவன் வீட்டிலே ஒரே அமர்க்களந்தான்.

ரதி உயர்ந்த இடத்துப் பெண்ணல்ல; உற்றார் உறவினர் கொண்ட பெண்ணுமல்ல, போதாக்குறைக்குக் கற்பை பறிகொடுத்த கன்னியென்ற களங்கப் பெயரை உலகநீயச் சூட்டிக்கொண்ட தூரதிஷ்டப் பெண்ணுமாகும்.

ஆனால் அவள் உண்மைக்கும், நேர்மைக்கும் மாறாக என்றுமே வாழ்ந்ததில்லை; வாழவேண்டுமென்று ஆசைப்பட்டதுமில்லை.

இந்த நிலையிற்றான் உற்றார் உறவினரற்ற இந்த அபலைப் பெண்ணுக்கு வாழ வழிகாட்ட முயன்றான் முத்து.

வறுமை என்னும் அகோரப்பிடியிற் சிக்கித் தவித்த ரதிக்கு ஊன்று கோலாகி உண்மை வாழ்வை வழங்க உழன்றான் முத்து.

வாழ்க்கை என்னும் ஓடத்திலே உணர்ச்சி என்னும் துடிப்பை வலித்துக் கலவி என்னும் இன்பத்தை நுகருமுன்பே காலன் முத்துவின் இன்னுயிரைக் கவர்ந்துவிட்டான்.

ரதியின் காதல் என்னும் மலரும் ஒரு நாளிலே மலர்ந்து, மணமும் பரப்பிக் கருகி மறைந்தது, காலத்தையும், கோலத்தையும் எண்ணி, எண்ணி உருகி உருக்குலைந்தாள் அவள்.

இந்நிலைமையிற்றான் ஆசிரிய நியமனமும் அவளைத் தேடிப் பறந்து வந்தது. அதன் நிழலிலே அமைதியானாள்.

அந்தக் கல்லூரியிற்றான் பாலுவும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியனாகக் கடமையாற்றினான்.

கல்வியில் மேன்மையும், வாழ்வின் புனிதமும், நேர்மையும் கொண்ட ரதியின் இளமைக் கொலுவுருவம் பாலுவைக் கொள்ளை கொண்டது.

பாலுவின் செயல் முதலில் ரதியைத் திக்குமுக்காடத்தான் செய்தது. தன் வாழ்க்கை ஒரு நாளாவது பாழாகிவிட்டதை அவளால் அவனுக்கு எப்படி எடுத்துக் கூறமுடியும்.

இளமைத் துடிப்புடனும், இனிமைச் சுவையுடனும் பாலு பலமுறை அவளிடம் நெருங்குவான். ரதி ஒரு ஒதுக்குப்புறமாக ஒதுங்கிக் கொள்வாள். தன் நிலைமையைக் கூறிவிட வேண்டும் போல் அவள் உள்ளம் பலமுறை குமுறும்.

நாணம் என்ற சுடர் அவளை மட்டும் எரிக்காமலா விட்டுவிடும். ரதியின் இளமைத் துடிப்பும், இனியபேச்சும் பாலுவை மேன்மேலும் தன்னிலை இழக்கத் தூண்டின.

பலமுறை ரதி தடுத்தும் பாலு கேட்கவில்லை. அவனின் பருவ உணர்ச்சியே என்னவோ ரதியைச் சுற்றிச் சுற்றி அலைந்தான்.

அவள் நாணமென்ற சுடரைத் தன் மனமென்னும் கல்லால் மறைத்துத் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட களங்கத்தை எடுத்துக் கூறினாள்; அவன் வழியை மாற்றியமைப்பதற்காக.

அதற்கு அவன் மதிப்புக் கொடுக்கவில்லை; மாறாக மறுத்தே உரைத்தான்;

'உண்மையில் வேண்டுமென்றே காலத்தாற் களங்கம் கற்பித்த வடுவைத்தான் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை'! என தனக்கேயுரிய உணர்ச்சிப் பெருக்கோடு பாலு இடித்துரைத்தான்.

'ஒருநாள் என்றால் என்ன? பலநாள் என்றால் என்ன? வடுவடுதானே?' என மறுத்துக் கூறினாள் ரதி.

பாலு இதையெல்லாம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; மதிக்கவும் மாட்டாத பிறவி அவன்;

இந்நிலைமையிற்றான் அவர்கள் காதல் மலரும் மலர்ந்தது; மணமும் பரப்பியது.

o o o o

"நம்ம சுந்தர் ஐயாவின் மகன் பாலுவின் சங்கதியை கேள்விப்பட்டியளோ? அவன் ரதி டீச்சரைக் களவாக மணந்துட்டானாமே? அவள் முன்பும் கலியாணம் முடிச்சவளாம் எண்டு ஊரெல்லாம் ஒரே பரபரப்பு" இருளின் நடுவிலே ஒரு பெண்குரல் குசுகுசுத்தது.

நடுவீதியிலே நடந்து கொண்டிருந்த ரதி சிலையாக நின்றாள்.

"அது பெரியவங்களூட்டுச் சமாச்சாரம், அதைப்பத்தி நமக்கென்ன கதை. அதவுட்டுட்டு வேறேதும் இருந்தால் கதையேன்" என அடுத்து ஆண்குரலொன்று அதனை அதட்டிக் கேட்கின்றது.

"சே! பாவம் நம்ம சுந்தர் ஐயா. அவர் பெரிய மனிஷனச்சே - அவற்ர கௌரவமென்ன? அந்தஸ்தென்ன? அத்தனையையும் இவன் பாலு

அருள்-அரசன்

ஒரு நொடிக்குள்ளே கெடுத்துட்டானே; அதைப்பத்தி நெனச்சா என் வயிறு கொதிக்குது" எனப் பச்சாத்தாபத்தோடு மீண்டும் குசுகுசுத்தது பெண்குரல்.

தன் காதையே நம்பாதவளாகத் திரும்பவும் மிகவும் அவதானமாகக் காதைச் சரித்துக் கேட்டாள் ரதி.

"அதைப்பத்தி ஏன் கதைக்கிறே, நீ கதைக்க என்ர மனதுக்குள்ளும் அவண்ட செயல் நெருப்பாக இருந்து பத்திப்பத்தி எரியுது" என அதட்டிய ஆண்குரல் கதையைத் தொடர்ந்தது.

"அதுதானே! நான் கேள்விப்பட்ட அத்தனையும் சொல்லப் போறேனெண்டால் பாவம் இந்தப் பாலுப்பயல் என்னென்ன செய்வானோ யாருக்குத் தெரியும். அவ்வளவு சுத்தமோசம் அந்த டீச்சர்" எனக் கதையை வெகு சுவாரசியமாகத் தொடங்கியது பெண்குரல்.

"அவ இந்தப் பக்கத்தால போற இளம் பொடியனுகளை பாடம் சொல்லித் தாரன் என்டு விடுவதில்லையாமே, அந்த மாதிரி எத்தனை பொடியன்கள் பாழ்பட்ட டீச்சராலே கெட்டுப் போனான்களோ கடவுளுக்குத்தான் தெரியும் இதைப் பத்திச் சொல்ல என் வாயும் கூசுது" என ஏதோ ஏதோ வெல்லாம் வாய்க்கு வந்த வாறு அளந்து கொண்டிருந்தது ஆண்குரல்.

இதைக் கேட்டதும் ரதியின் தலை சுழன்றாடியது. நிற்கும் நிலையிழந்து கால்கள் சோர்ந்தன நெஞ்சம் ஒன்றுமறியாத கலவரத்திற் சிக்கிச் சிதறிச் சின்னா பின்னமாகிவிடும் போலத் தோன்றியது.

"அட! இதைத்தானே நீ கண்டே. இதைவிட மோசமாக அவ நடந்ததை என் கண்ணால கண்டன். அதைச் சொல்லப்போனா......", எனக் கதையை மீண்டும் தொடர்ந்தது பெண்குரல்;

"அது கிடக்கட்டும் இந்த மாதிரியானவளா இவனுக்குக் கிடைக்கவேணும், எல்லாம் அவன்ர ஊழ்வினைதான். முற்புறப்பில என்ன பாவம் செய்தானோ ஆர் கண்டது" ஆண்குரல் தொடர்ந்தது.

"என்ன ஊழுங் கீழும்? அவள் ஒரு மாதிரியாக அவனை மசக்கிப் போட்டாள். அவள் எத்தனைபேரை மசக்கியவள் தெரியுமா? இவரா அவளுக்குப் பெரிய ஆளு" என்று பெண்குரல் முடிக்கு முன்பே,

"பூத்தமரம் காய்க்காமலா விடும். ஏதோ பெடியனும் ஒரு மாதிரி, அவவின்ர வலையில மசங்கிட்டான்; அவ்வளவுதான்" என ஆண்குரல் அலம்பியது.

ரதிமேலும் அவர்களுடைய உரையாடலைக் கேட்க விரும்பாதவளாகக் காதைத் தன் இரு கைகளாலும் பொத்திக் கொண்டு அந்த உருவங்களை நோட்டமிட்டாள்.

அந்த உருவங்கள் யாருமல்ல; ஒன்று அவள் உயிர்த்தோழி லீலா; மற்றது பாலுவின் ஆத்ம நண்பன் வேலு; "இவர்களா இப்படிக் கதைக்கிறார்கள்" என மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டு, தன் கண்களையே நம்பாதவளாக மீண்டும் அவர்களை நோட்டமிட்டாள்.

சந்தேகமேயில்லை; அந்த இரு உருவங்களுந்தான் சுவஸ்காரமாக இதைப்பற்றி மேன் மேலும் ஏதோ ஏதோவெல்லாம் கதைத்துக் கொண்டிருந்தன.

இவர்களைச் சந்தேகமறக் கண்டதும், ரதியின் மனம் குழம்பிக் குழம்பிக் குலைந்தது. 'சோ' என்ற ஊதைக் காற்றுச் சோனா வாரியாக சுழன்றாடுவது போல அவளின் மனமும் குழப்பிக் குழப்பிக் குலைந்தது. கால்கள் தன்மனவேகத்தைவிட ஒருபடி முன்னேறி நடையைக் கட்டின.

அடுத்த கணம் அவள் தனது அறையை அடைந்துவிட்டாள். கட்டிலே தஞ்சமென உருண்டு புரண்டாள். அவள் உடல்சோர்வும், உள்ளச்சோர்வும் ஒன்றை ஒன்று மேவி நின்மையை உரைத்துக்கொண்டே இருந்தன.

o o o o

பாலு கட்டிலிற் புரண்டவாறே தனக்கு வந்த கடிதங்களை மேற்போக்காகத் தட்டிக் கொண்டிருந்தான்.

அதில் ஒரு கடிதம் மற்றக் கடிதங்களைவிட அவன் ஆவலை அதிகமாகத் தூண்டிக் கொண்டிருந்தது;

ஆமாம் அவன் ஆவலைத் தூண்டுமளவிற்கு அக்கடிதத்தில் என்ன பரமாதமோ? யாருக்குத் தெரியும்.

மனவேகத்தையும் விட ஒருபடி முன்னேறி அவனுடைய கைகள் கடிதத்தையே பிரித்து விட்டன.

அவன் மனமும் அக்கடிதத்திலுள்ள மணிமணியான

(9-ம் பக்கம் பார்க்க




முருகேசன்,
கொழும்பு-6.

கே: புதிதாக முளைத்துள்ள 'ஜனவேகம்' என்ற ஏடு—சுதந்திரன் தரங்கெட்ட பத்திரிகை என்று எழுதியிருக்கிறதே?

ப: கழுதைக்கு கர்ப்பூர வாசனையைப் பற்றி என்ன தெரியும்? பன்றிகளுக்கு மல நாற்றம்தான் சுவைக்குமே தவிர மல்லிகை மணத்தைப் பற்றி எப்படி புரியும்?

ஃ

ராமநாதன்,
சுன்னாகம்.

கே: தமிழர் தந்தை செல்வாவையும், தமிழரசுக்கட்சியையும் சுதந்திரனையும் திட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் காளான் பத்திரிகை புதிதாக முளைத்திருக்கிறதே—பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். எதற்கும் தமிழ்நாட்டையே 'காப்பி' யடிப்பதாக எம்மைத் திட்டித் திரிபவர்கள், தாமாகவே சுயமாகச் சிந்தித்து தங்கள் பத்திரிகைக்கு ஒரு பெயரை வைக்கக்கூட தெரியாது—தமிழ்நாட்டுப் பத்திரிகையொன்றின் பெயரையே 'காப்பி' அடித்திருக்கிறார்கள்! அரசியலில் நிலையான கொள்கையின்றி, சுயநலத்துக்காக அங்கும் இங்கும் 'அலை'ந்து திரிபவர்களின் அலறல் 'ஓசை'யது! காசுக்காக எதையும் எழுதவும் பேசவும் செய்கின்ற துரோகிகளும் லோலவர்களும் முடிந்தவரை திட்டித்தீர்க்கட்டும்—காளான்கள் திட்டி எருது சாவதில்லையே!

ஃ

கமலா-சண்,
'சாந்தி அகம்'
மல்வம், உடுவில்.

கே: குயுக்தியாரே! தமிழே தன் உயிர் என்று கருதி தமிழுக்காக உழைத்து வந்த ஒருவர் இன்று தமிழை இழிவுபடுத்துவது மல்லாமல் தமிழர் கூட்டணியையும் இழிவாக பேசி வருகிறார். இதனால் தமிழே என் உயிர் என்று வாழும் எனக்கு மிகவும் கவலையாகவுள்ளது. இந்தத் தாய்மொழித்துரோகியின் இழிவுநிலை மாறவே மாட்டாதா?

ப: ஏதோ சபலம் கொண்டு அப்படி நடக்கிறார். ஏமாற்றப்பட்டதும் திரும்பிவருவார்!

கே: அண்ணா போல் ஒரு தமிழ் மகன் இனிப் பிறப்பாரா?

ப: பிறக்கவேண்டுமென்று பிரார்த்திப்போம்!

ஃ

சோ. ஸ்ரீஸ்கந்தராஜா,
இணுவில

கே: நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் சம்பவம் குறித்து அரசாங்கத்தின் முடிவைக்கேட்டு இன்னும் பதவியில் இருக்கும் மந்தி(ரி) சூரியரும், பனி அம்பலங்களும், ஆட்டக்காவடி தியாகரும், துரோகப்பர்களும் உள்ளம் குமுறும் தமிழ் மக்களுக்கு என்ன பதில் கூறப்போகிறார்களோ?

ப: மௌனம்!! மௌனம்!! மௌனம்!?

கே: ருவான்வெலே இராசசிங்க மகாவித்தியாலயத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் காணியமைச்சர் கொப்பேகடுவ பேசியது பற்றி தங்கள் கருத்து என்னவோ?

ப: ஏழை, பணக்காரன் என்ற வர்க்க உணர்ச்சியிலும்கூட இனவெறியேஇழையோடுகிறது!

ஃ

செல்வி வி. கனகேஸ்வரி,
புலோலி.

கே: பாண்டிச்சேரியில் அ. தி. மு. க.,— கி.பி.ஐ.க் கூட்டணி அரசாங்கம்கவிழ்ந்ததற்கு தங்களின் கருத்து என்ன?

ப: அரசை நடத்துமளவுக்கு பெரும்பான்மை இல்லாததுதான் காரணம்!

கே: தமிழைப் போற்றுபவனுக்கும், பகைப்பவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தமிழைப் போற்றுபவன் தன் தாயைப் போற்றுகிறான் — பகைப்பவன் — தன் தாயையே பகைக்கிறான்.

கே: நீங்கள் கச்சதீவுக்குப் போயிருந்தீர்களா? அப்படியாயின் அங்கு நீங்கள் கண்டு சுவைத்து ரசித்த சம்பவம் ஏதேனும் உண்டா?

ப: நான்தான் ஜனரீதலம் என்றுஎன்னை மொய்த்துக்கொண்டார்கள். அதிலிருந்து விடுபடுவது பெரும்பாடாகிவிட்டது.

ஃ

எம். தமிழ்வாணி,
பந்திகை

கே: ஹலோ குயுக்தியாரே, சுதந்திரன் பத்திரிகையில் குயுக்தி என்ற பெயருக்குள் மறைந்திருந்து பதில் அளிக்கும் நீங்கள் வெளி அரங்குகளில் நடக்கும் கூட்டங்களில் என்ன பெயருடன் உலவுவீர்கள்?

ப: எதற்காக கேட்கிறீர்கள்? எனக்கு கல்லெடிக்கவா? அல்லது கண்ணடிக்கவா?

ப. சிவலிங்கம,
பண்டாரவளை.

கே: தற்போது தடுப்புக்காவலில் இருக்கும் இளைஞர்களை எப்போது விடுதலை செய்வார்கள்?

ப: ஜெயில் சாவி எனது கைகளில் இல்லையே!

கே: கருணாநிதியின் முகவரி என்ன?

ப: பெயருடன் கோபாலபுரம் சென்னை, தமிழ் நாடு.

ஃ

ந. வசந்தகுமாரன்,
நல்லூர்.

கே: சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி உரிமை பெறும் தமிழ் மக்களை மற்றும் இலங்கை மக்களைப் போலவே நடத்தவேண்டும்; மலையகத் தமிழர்கள் பட்டினியால் செத்துமடியக் கண்டும் இலங்கையிலிருக்கும் இந்திய தூதரகமும், இந்திய அரசும் கண்மூடி மௌனியாக இருப்பதேன்? இலங்கையிலுள்ள இந்தியப் பிரசைகளைப் பற்றிக் கேட்க இந்திராவுக்கு உரிமை இல்லையா?

ப: உரிமையிருந்தாலும்—பிரச்சினைக்குரியவர்கள் தமிழர்களாக இருக்கிறார்களே—இந்திக்காரர்களாக இல்லையே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

## வாஷிங்டன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இருந்து வருகின்றனர். ஏலேபோர், பல நூற்றாண்டு காலமாக இத்தீவில் சுதந்திரமுள்ளவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர், முட்டை வடிவமான இந்தத் தீவின் வடபகுதியில் ஒரு மூலைபோன்று நீட்டிக்கொண்டிருக்கும் சிறிய அளவிலான யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழர்கள் தமது சொந்த அரசை ஸ்தாபித்து ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள்.

"அதற்கும் வெகு காலத்துக்கு முன்பு இந்துக்களாகிய தமிழ் மக்கள் தென் இந்தியாவிலிருந்து அடிக்கடி படை எடுத்துக்கொண்டு பாக்கு நீரிணையைக் கடந்து வந்து சிங்கள மக்களை இத்தீவின் காடுகள் அடர்ந்த பிரதேசமாகிய தென்பகுதிக்குத் துரத்தி விட்டனர்.

"இந்து மதத்தினரான தமிழ் மக்களை இலங்கையினதும் புத்தமதத்தினதும் விரோதிகள் என்று கருதி வந்த புத்த குருமார்களால் இந்தப் பழைய வரலாறு எழுதப்பட்டுள்ளது. சிங்கள மக்களின் சிந்தனைகள், ஆசிய மக்களிடம் வழக்கமாக உள்ளவாறு — இந்தப் பழைய காலத்தை அடிக்கடி நோக்கிச்செல்வதினால் இரு இனத்தவர்களினதும் உறவில் விஷமிருந்தே வருகின்றது."

## இலங்கை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் அவர்களைப் பொறுத்தது. சோஷலிசத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று, ஒரு நாட்டில் வாழுகின்ற எல்லா தேசிய இனங்களும் சம உரிமையோடு வாழவேண்டும் என்பது. எனவே, சோஷலிச நாடுகள் எமக்கு உதவி அளிப்பதில் தயக்கம் இருக்கக்கூடாது. இதுவரை மற்ற நாடுகளை உதவி கேட்க வேண்டிய நிலைக்கு எமது போராட்டம் விரிவடையவில்லை.

கே: தென்கிழக்காசியாவில் உள்ள தமிழர்களுக்கென இருக்கும் பண்பாட்டுப் பரப்புக்கென (Culture Area) நிறுவனம், அல்லது அமைப்பு ஒன்றைஏற்படுத்துவதை வரவேற்கிறீர்களா? அதனுடைய நோக்கங்கள், செயல்கள் எப்படி இருக்க வேண்டும்?

ப: வரவேற்கின்றேன்; தென்கிழக்காசியாவில் மட்டுமல்ல, உலகம் முழுதும் வாழுகின்ற தமிழர்களின் கலை, கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கு நிறுவனம் இருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. சில நாட்களுக்குமுன் இலண்டனில் பி.பி.சி. 'தமிழோசை' பகுதியில் பேசும்போது, நான் குறிப்பிட்டதைப்போல் தமிழன் உலகத்தின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், தமிழனுக வாழ்வதை நோக்கமாக வைத்து. இந்த நிறுவனம் இயங்கி, அவனது கலை, கலாச்சாரத்தைப் பாதுகாத்துப் பேணவேண்டும்.

## யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டுப் பார்வையாளர்களாகவும், பிரதிநிதிகளாகவும் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இன்னும் நிச்சயமாக அதிகரித்திருக்கும்; ஏராளமானோர் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர்; ஆனால் 'விசா' வழங்குவதில் இலங்கை அரசு காட்டிய சுணக்கமும் வேண்டா வெறுப்பான போக்குமே அறிஞர்களை இங்கு வர விடாமல் தடுத்து விட்டது.

ஆம் - அதற்காகத்தானே - அதாவது தமிழ் மாநாட்டின் சிறப்பை எவ்வளவு தூரம் கெடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைக்கவும் கெடுக்கவும் தானே அரசும் அரசின்ஆதரவாளர்களான ஆமாம் சாமித் தமிழர்களும் கடைவரை பாடுபட்டனர்.

எனினும் எல்லாத்தடைகளையும் மீறி - தமக்கு ஏற்பட்ட கஷ்டங்களை பொருட்படுத்தாது. நான்காவது உலகத் தமிழ்மாநாட்டுக்கு வந்து சேர்ந்த வெளிநாட்டு அறிஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

இவ்வாறு வெளிநாடுகளிருந்து வந்திருந்த பேராளர்களுடன், நம்முடைய ஈழத்தமிழ் ஆராய்ச்சியாளர்களும் ஒன்றிணைந்து கருத்தரங்குகளில் தமிழ் ஆராய்ந்த காட்சி, சுவையும பயனும் நிறைந்ததாகும்.

முதலாளித்துவ நாடு என்று கூறப்படும் அமெரிக்காவைச் சேர்ந்த அறிஞர்களும், கம்யூனிஸ்ட் நாடான ஹங்கேரியைச் சேர்ந்த அறிஞரும் ஒரே மேடையில் ஒன்றிணைந்து நின்றார்கள் என்றால் - அவர்களை இணைத்து வைத்த அந்தச் சக்தி'ய தமிழ் ஆகும்.

வெளிநாட்டு அறிஞர்களுடன், நம் ஈழத்து அறிஞர்களான வண. தனிநாயக அடிகள், கலாநிதி வித்தியானந்தன், கலாநிதி பத்மநாதன் கலாநிதி பூலோகசிங்கம், கலாநிதி வி. சுப்பிரமணிய லிங்கம், கலாநிதி தனஞ்செயராசசிங்கம், கலாநிதி (திருமதி) லோர்ணா தேவராஜா, கலையரசி வேந்தனார் உட்பட பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மட்டுமன்றிபல் கலைக்கழகத்துக்கு வெளியேயிருக்கும் திரு எஸ். அம்பிகைபாகன், கே. இ. மதியாபரணம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், ஜேம்ஸ் இரத்தினம், சமூவேலந்தன், நவசோதி, டாக்டர் என். கே. மகேஸ்வரன், ஆகியோருட்பட ஏராளமான ஆராய்ச்சியாளர்களு கருத்தரங்குகளில் கட்டுரைபடித்தனர்.

மாநாட்டில் முஸ்லிம் அறிஞரான ஜனாப் உவைஸ் அவர்களும். சிங்கள அறிஞர்களான டி.டி. நாணயக்காரா, இலங்கைப்பல்கலைக்கழக விரிவுரையாளரான திரு. விஜயகுமார, குமார வீரா ஆகியோரும் கலந்து கொண்டதன் மூலம் நடைபெற்றது ஆராய்ச்சி மாநாடே தவிர சிலர் கூறித்திரிந்ததைப் போல அரசியல் மாநாடல்ல என்பதை நிரூபித்தனர்.

மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை படித்தவர்களில் வயதில் மிகவும் இளையவராக இருந்தவர், செல்வன் அசோக்குமார் ராஜப்பன் அவர்களாகும். பதினெட்டு வயதே நிரம்பிய அசோக்குமார் எதிர்காலத்தில் ஓர் பெரும் ஆராய்ச்சி அறிஞராக நம்மிடையே விளங்குவார் என்று சொல்லத்தக்க அளவு - சுறு சுறுப்பும் துடி துடிப்பும் ஆழ்ந்த அறிவும கொண்டவராக காணப்பட்டார். அசோக் குமாரை மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் மனம் விட்டுப் பாராட்டினர் டாக்டர் மு. வரதராசனார் நாவல்களைப் பற்றி அவர் தனது ஆராய்ச்சியை நடத்தியிருந்தார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்தவரும், தமிழ் மொழிக்காகவும், இனத்துக்காகவும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவரும் கலாநிதி பட்டம் பெற்றவருமான இளைஞர் ஒருவரும் எதிர்பாராமலே மாநாட்டில் கலந்துகொண்டார் தனக்கு எங்கு சிறப்புக் கிடைக்கின்றதோ - அங்கெல்லாம் தன் மீது பற்றுக்கொண்ட தனது மைந்தர்களை தமிழ்த்தாய் நிச்சயம் அழைத்தே தீருவாள் போலும்.

அந்த இளைஞர் பற்றி இதற்கு முன்னும் இக்கட்டுரைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டிருக்கிறேன். ஈழத்துப்பத்திரிகைகள் மாநாட்டைவிட, மாநாட்டுக்கு வந்திருந்த அந்தச் சாதாரண இளைஞருக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன. அந்த இளைஞரை "அழையாவிருந்தாளி" என்றும் குறிப்பிட்டன. இது உண்மைதானா? அந்த இளைஞரைப்பற்றி பத்திரிகைகள் என்னென்ன வெல்லாம் பொய்ப்பிரச்சாரம் நடத்தின என்பதை இக்கட்டுரைத் தொடரில் இன்னொரு சமயத்தில் புட்டுக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

இனிக்கருத்தரங்குகளில் நடைபெற்ற சுவையான விவாதங்களைக் கவனிப்போம்.

—தொடரும்.

## ஒரு திருத்தம்

சென்றவாரம் 7ம் பக்கத்தில் இடம் பெற்றிருந்த கட்டுரையில் யாழ்ப்பாண மாநகரசபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது 1948ம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறானது என்றும், 1949ம் ஆண்டு தை மாதம்தான் அது அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதென்றும் அக்கட்டுரையை எழுதிய 'இளங்கோ' எனும் அன்பர் தெரிவிக்கிறார். 1974 தை மாதத்திலேயே யாழ். மாநகரசபையின் வெள்ளி விழாக்கொண்டாடப்பட்டிருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

அருள் விருந்து

'நீ படைக்கும் நைவேத்தியம் இறைவனுக்கு முக்கியமானதன்று. உன்னுடைய ஒழுக்கமும், உள்ளன்புமே அவனுக்கு முற்றிலும் உகந்தவைகளாகின்றன.'
—தர்மசக்கரம்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# 'விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என் செயக்கருதி இருக்கின்றாயடா?'

## இலண்டன் தமிழர்களின் குமுறல் கேள்வி!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள் குறித்து இலண்டன் வாழ் தமிழர்கள் சார்பில் இலண்டனில் வெளியிடப்பட்ட பிரசுரத்தின் முதல் மூன்று பகுதிகளையும் ஏற்கெனவே சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம். இறுதிப்பகுதி இங்கு இடம் பெற்றுளது.

'மாநாட்டுக்குத் தமிழ் நாட்டைச் சேர்ந்த முதலமைச்சரோ, வேறு அமைச்சர்களோ வருகைதராமை வருத்தத்தைக்கொடுத்திருந்தது. எனினும், அரசின் கெடுபிடிகளைத் தாண்டி இவர்கள் வந்திருக்க முடியாது என்ற உண்மையைப் பொது மக்கள் அறிவார்களாகையால், அவர்கள் ஏமாற்றமடைந்தார்கள் என்று கூறுவதற்கில்லை!

திரு. ம. பொ. சி., திரு. கி. வா. ஜ. போன்றவர்களாவது வருவார்கள் என மக்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களும் வரவில்லை. தமிழ்நாட்டின் அரசியலோடு தொடர்புடையவர்கள் மாநாட்டுக்கு வந்திருப்பின், மாநாட்டைப் பற்றி இல்லாத பொல்லாத அபவாதங்களையெல்லாம் கூறி வெறும் வாயை மெல்லும் இலங்கை அரசுக்கு ஒரு தட்டு நிறைய அவல் கிடைத்தது போல இருந்திருக்கலாம்.

மாநாட்டுக்கு உலகத் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த டாக்டர் இரா. ஜனார்த்தனன் மலேசியாவிலிருந்து நேரே வந்திருந்தமை அரசுக்கு ஒரு பிடி அவலை அள்ளிக் கொடுத்தது என்னவோ உண்மைதான்! சி. ஐ. டி. பொலிசார் அவரை மோப்பம் பிடித்துக் கொண்டே திரிந்தனர். அவரைச் சுற்றி அரசியல் அபவாதங்களைக் கட்டியெழுப்புவதற்கு எவ்வளவோ முயன்றனர் கொழும்பு சி. ஐ. டி. அலுவலகத்திற்கு வருமாறும் அவருக்குக் கட்டளையிட்டனர்.

மாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தின் போது, மேடைக்கு அண்மையிலிருந்த டாக்டர் இரா. ஜனார்த்தனன் அந்தப் பொலிஸ் அட்டூழியத்தில் கையிலும் காலிலும் அடிபட்டவராக மறுநாள் பாதிரி வேடத்தில் இலங்கையை விட்டுத் தமிழ்நாடு சென்றார் எனத் தெரிய வந்தது!

ஆரம்பம் முதலே மாநாட்டுக்கு அரசியல் பூச்சுக் கொடுத்து அதனைத் நிர்மூலமாக்குவதற்கு முயன்ற அரசு ஏமாற்றமடைந்தது எனவே கூறவேண்டும். மாநாடு காலையில் ஆராய்ச்சி அரங்காகவும் மாலையில் கலையரங்காகவும் நடைபெற்றது. ஆராய்ச்சி அரங்குகள் காலையில் வீரசிங்கம் மண்டபத்திலும் பிற்பகலில் குழுநிலைக் கருத்தரங்குகளாக றிம்மர் மண்டபத்திலும் நடைபெற்றது. கலையரங்குகள் வீரசிங்கம்மண்டபம் மாநகராட்சி திறந்த வெளி அரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய மூன்று இடங்களிலும் அமைந்திருந்தன. தவிரவும் மகளிர் கல்லூரியில் தமிழர் வாழ்வையும் வளப்பையும் வரலாற்றையும் எடுத்துக் காட்டும் கண்காட்சியும் இடம்பெற்றது.

இவ்வரங்குகள் அனைத்திலும் தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் உட்பட, தமிழர் கூட்டணியின் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டார்களாயினும் மாநாட்டில் அவர்கள் எவரும் பேச்சாளராகப் பங்கு கொள்ளவில்லை. ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினரான பண்டிதர் இரத்தினம்

அவர்கள் மட்டுமே அவரது திருக்குறள் பற்றிய கட்டுரையை வாசித்தார். அரசியற் பூச்சுப் பூசும் அரசின் முயற்சி எடுபடவில்லை.

கருகிக் காய்ந்துவிடும் என எதிர்பார்த்த மாநாடு முதல் நாளே முழுமதியின் பொலிவுடன் களைகட்டவும் யாழ்ப்பாணம் மேயர் நகரில் தங்குதற்குச் சஞ்சலப்பட்டோ அன்றி சங்கோசப்பட்டோ மனைவி சகிதம் தமிழ் நாட்டுக்குத் தலயாத்திரையொன்றை மேற்கொண்டு விட்டார். அவரது பொறுப்பற்ற செயலை அவரின் ஆதரவாளர்களே கண்டிக்கத் தலைப்பட்டனர்.

மாநாட்டின் மகோன்னத வெற்றியைத் தமிழ் நாட்டிலிருந்தே கேள்வியுற்றமேயர் அவ் வெற்றியில் தாமும் பங்குகொள்ளப் போலும், 9ம் திகதி யாழ்ப்பாணம் திரும்பியதும் மாநாட்டுப் பிரதிநிதிகளை ஒரு விருந்துக்கு அழைத்தார்.

மேயரை அவமதிக்கக் கூடாது என்ற பெருந்தன்மையினால், மாநாட்டு அமைப்பாளர்கள், வண. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சு. வித்தியானந்தன் உட்பட அந்த விருந்துக்குச் சென்றனராயினும், பிரதிநிதிகளில் ஏறக்குறைய அனைவருமே விருந்துக்குச்செல்ல மறுத்து விட்டனர். அழைப்பை நிராகரித்த மேற்கு ஜெர்மனிய அறிஞர் பேராசிரியர் ஜெனேட் அவர்கள் யாழ்ப்பாண மேயரை ஒரு 'வேடிக்கையான மேயர்' (Funny Mayar) என வருணித்தமை குறிப்பிடத்தக்கது.

மேயர் என்ற முறையில் யாழ்ப்பாண மாநகரத்தின் தலைமகனாக நின்று மாநாட்டை நடத்தியிருக்கவேண்டிய திரு. துரையப்பா, தன் பெயரை இவ்வளவு தூரம் களங்கப்படுத்தியிருக்கக் கூடாது என்பதே அறிஞர்கள் பலரினதும் கருத்தாகும்.

தமது விருந்தினை மாநாட்டுப் பிரதிநிதிகள் புறக்கணித்ததால் வெருண்டெழுந்த மேயர், பத்தாம் தேதி கூட்டத்தை நடாத்துதற்கு ஒப்புதலளித்தபடி மாநகராட்சித்திறந்தவெளி அரங்கினைக் கொடுக்கத் திடீரென்று மறுத்துவிட்டார். இறுதி நாள் கூட்டத்திற்கென அரங்கினை அலங்கரித்துக் கொண்டிருந்த மாநாட்டு அமைப்பாளர்கள் அரங்கு திறக்கப்படாதது கண்டு கூட்டத்தை வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்த முற்பட்டனர்.

பொதுக் கூட்டம் பொது மக்களுக்கு வெளிநாட்டு அறிஞர்களை அறிமுகம் செய்துவைக்கக் கூடியதாகத் திறந்த வெளியில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமையாலும் வீரசிங்கம் மண்டபத்தினுள் பொதுமக்கள் அனைவரும் புகக் கூடிய இடவசதி இல்லாததாலும், கூட்டத்தைத் தாம் பார்க்கக் கூடியதாக நடாத்தும்படி மண்டபத்திற்கு வெளியே திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் கோரிக்கை விடுத்ததாலும் மண்டபத்திற்கு வெளியேயுள்ள திடலில் கூட்டத்தை நடாத்துவதெனத் திடீரென்று ஏற்பாடாயிற்று.

முழுமைபெற விருந்த வெற்றிக் காவியம் ஒன்றிற்கு முடிவுரை தீட்டும் கட்டத்தில் அந்தப் பொது கூட்ட அரங்கு ஒரு 'ஜாலியன் வாலாபாக்'காக மாறும் என்றோ, அங்கு, 'பஞ்சாப் படுகொலை' நடைபெறும் என்றோ எவரும் எதிர்பார்க்காதது விந்தையல்ல. 'விதியே!' விதியே! தமிழ்ச் சாதியை என்செயக் கருதி இருக்கின்றாயடா?'

ஒன்பதுபேர் ஒரே இரவில் சாகடிக்கப்பட்டுள்ளனர். பொலிசார் மீது பாரதூரமான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. கொதிக்கும் கொப்பரையாக வெந்துகொண்டிருக்கின்றார்கள் தமிழ் மக்கள். அரசு தன் முகத்தைக் கூடச் சுழித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இவ் விடயத்தில் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மதியாது மௌனம் சாதிப்பதோ தன் பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதோ, பொறுப்புள்ள ஓர் அரசுக்கு ஏற்றதல்ல. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் இசைவானதல்ல. அரசின் ஏவுதலின் பெயரில் தான் பொலிஸ் வெறியாட்டம் கட்டவிழ்த்துக் கரைபுரண்டோடியது என்ற பழி ஏற்கெனவே அரசின் மீது பரவலாகச் சுமத்தப்பட்டுள்ளது. இது அபாண்டப் பழியானல், அதனைத் துடைத்துத் தன் பெயரைக் காத்துக் கொள்ளவேண்டியது அரசின் கடமையாகும். தன் கையில் கறையில்லையென்றால் அரசு தன் கையை அகல விரித்துக் காட்டும் என்பதே தமிழ் மக்களின் வாதம்.

## கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா எழுதுகிறார்!

அன்புள்ள சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு,

சுதந்திரனில் வெளிவரும் 'யாழில் எழுந்த தமிழோசை' கட்டுரைத் தொடரைப் படித்து வருகின்றேன். முக்கியமான சில குறிப்புக்களையும் திருத்தங்களையும் இங்கு தருகிறேன். இவற்றை உரியமுறையிற் பிரசுரிக்குமாறு மிகவும் வினயத்துடனும் நல்லெண்ணத்துடனும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. திரு. மு. கருணாநிதிக்கும் மற்றைய தமிழ் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் அழைப்புக்கள் அனுப்பும் செயல்முறைப் பொறுப்பை உரியநேரத்தில் திரு வி. எஸ். துரைராஜா கையேற்றார். அவர் அப்பணியைச் செய்தும் இருக்கிறார். இப்பணிக்கு நான் பொறுப்பாளியாக இருக்கவில்லை.

2. பிரதமரிடம் எவ்வளவோ கஷ்டப்பட்டு, நானுகவே கேட்டுப் பேட்டி பெற்று 'விசா'க்களுக்கு அனுமதி பெற்றேன். மற்றைய அமைப்பாளர் எல்லோரும் லைகவிட்டபின் தனித்துனியனாக மிகவும் பிரயாசைப்பட்டு நான் இதைச் செய்திராவிட்டால் மாநாடு நடந்திருக்க முடியாது.

3. கொழும்பில் மாநாடு நடத்தினால் தான் 'விசா'க்கள் தரலாம் என்று வெளிவிவகார அமைச்சு திரும்பத் திரும்பச் சொல்லியதையே 14-12-73 எழுத்தில் அனுப்பினர். இது ஒரு விசேட ஊழியர் மூலம் மன்றச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டது என்று இதைப் பெற்ற திரு. எஸ் அம்பலவாணர் கூறினர். ஆனபடியால் இக்கடிதம் என்னால் பெறப்படவில்லை.

4. மாநாட்டுத் திரைப் படத்தில் எனக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை. நான் விளம்பரப் பிரியனல்ல எனினும் இவ்விஷயங்களிலேயும் நீதியும், ஒவ்வொரு வருடைய சேவைக்கேற்ற விமர்சன மதிப்பீடும் கொடுக்கப் படவேண்டும் என்பதே என் குறை எனினும் இதையிட்டு திரு. வி. எஸ். துரைராஜாவாகிய தயாரிப்பாளரிடம் பிரஸ்தாபித்ததுடன் என் பிரயத்தனம் முடிவுற்றது. இதையிட்டு நேரிடையாகவோ மறைமுகமாகவோ நான் வேறொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

5. ஜனவரி 10 அன்று பொலிசாரின் நடத்தை மிகவும் அநியாயமானது என்பது எனது அசைக்க முடியாத கருத்து. இதைப் பற்றி நாம் பொலிஸ் நீதிபதிக்குச் சாட்சியம் கொடுத்திருக்கின்றேன். அரசாங்கத்தினர் அநியாயமான முறையில் நடந்துகொண்ட பொலிசாருக்கெதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று என் தனிப்பட்ட முறையில் இன்றும் வற்புறுத்தி வருகிறேன். ஏனெனில் உங்களுடைய (ஆசிரியருடைய) கண்முன்வேயே அரை மணித்தியாலத்திற்கு மேல் கண்ணீர் புகை பருகி வெளி மேடையை விட்டு நகராமல் மயங்கி எழுந்து கூட்டத்திற்கு வந்த மக்களின் அவஸ்தைகளைக் கண்டு அவற்றில் பங்கும் கொண்டுள்ளேன். அன்று நடந்த மரணங்களைப்பற்றி அறியாமலே இரண்டு கிழமைக்கு முன் பதியப்பட்டபுகையிரத ஆசனத்தைப் பயன்படுத்தி 11-1-74 காலை கொழும்பு நான் வந்தும் பிரதமர் இந்தியா செல்லுமுன் 10-1-74ல் நடைபெற்ற நானறிந்த உண்மைகளை அறிவித்தேன். இவ்விஷயத்தில் கூடிய கெதியில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து நீதியை நிலை நாட்டும் என்று நான் நம்புகிறேன்.

(6) 21-4-74 சுதந்திரன் 5ம் பக்க 5ம் வரிசையில் நான் அறிக்கைகளை முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே வெளியிட்டேனென்று உண்மையை அறியாமல் எழுதியிருக்கின்றீர்கள்.

1973 டிசம்பரில் என்னால் வெளியிடப்பட்டு நாடெங்கும் விநியோகிக்கப்பட்டு சுதந்திரனுக்கும் அனுப்பப்பட்ட அறிக்கையின் நகலொன்றைத் திரும்பவும் அனுப்புகிறேன். இதைப் போல் எத்தனையோ அறிக்கைகள் தமிழில் கையெழுத்திலேயே பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். ஏனெனில் மன்றப் பாவனைக்கு அப்போ ஒரு தமிழ் தட்டெழுத்து யந்திரமேனும் கிடைக்கவில்லை ஆங்கிலப் பத்திரிகைகளில் வந்த எதிரான செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் மறுப்புத் தெரிவிக்கும் வேளையிலேயே ஆங்கில அறிக்கைகளை வெளியிட்டேன். நானேன் ஆங்கிலத்திலேயே அறிக்கைகள் விட்டிருக்க வேண்டும்? நான் தமிழ் நன்ருக எழுதப் பேசத் தெரிந்தவனே. ஆங்கில அறிக்கைகளாலும் நன்மைகள் வந்திருக்கின்றன. இதையும் மறக்கக்கூடாது. உதாரணமாக, 15-12-73 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் என்னுடைய கட்டுரையைப் படித்து உண்மைகளை அறிந்த பிரதமரே எனக்குப் பேட்டி தந்து 'விசா' வழங்கவும் பிரதமர் சம்மதித்தார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர் குறிப்பு:—

- கருணாநிதிக்கும் தமிழகத்தின் ஏனைய முக்கிய அறிஞர்களுக்கும் தலைவர்களுக்கும் உரிய முறையில், நிச்சயமாகக் கிடைக்கக் கூடியவாறு அழைப்பிதழ்கள் அனுப்பப்படாமைக்கு தனிப்பட்ட ஒருவரையன்றி — இலங்கைக் கிளையையே நாம் குற்றம் காட்டியுள்ளோம்.
- கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா கூறுவதுபோல — 'விசா' பெறுவதற்கு அவர் கடைசிநேரத்திலும் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் உலக அபிப்பிராயத்துக்கு அஞ்சியே இறுதிக் கட்டத்தில் அரசு விசா வழங்க ஒப்புக்கொண்டது என்பதே நமது திடமான கருத்தாகும்.
- தமிழாராய்ச்சி மாநாட்டை யொட்டிய அறிக்கைகள் தமிழிலும் வெளியிடப்பட்டன என்று அன்பர் மகாதேவா கூறுவது சுமக்கு மகிழ்ச்சியை அளித்தபோதிலும், அவர் கூறுவதுபோல சுதந்திரனுக்கு தமிழில் எந்த அறிக்கையும் எப்பொழுதும் அனுப்பப்படவில்லை சுதந்திரனுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள் யாவும் ஆங்கிலத்திலேயே இருந்தன.

— ஆசிரியர்.

காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சிறையில் இன்று
676-வது நாள்

# 'இலங்கைத் தமிழரசுக்கட்சி ஓர் சோசலிசக் கட்சியே!'

## 'உரிமை வேட்கை' வார ஏட்டுக்கு உடுவில் பா. உ. அளித்த பதில்கள்!

அண்மையில் இலண்டனில் நடைபெற்றகாமன் வெல்த் பாராளுமன்றச் சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்குசென்றிருந்த உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம், இலண்டனிலிருந்து இலங்கை திரும்பும்வழியில் சென்னையில் சில நாட்கள் தங்கினர். அங்கு தமிழகப் பத்திரிகையாளர்களையும், தமிழகத்தின் பல்வேறு அரசியற்கட்சிகளின்தலைவர்களையும், சந்தித்துப் பேசினர். நீதிபதி திரு. மகராஜன் தலைமையில் சென்னையில் நடைபெற்ற திரு. வி. க. நினைவு விழாவில், சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. சுந்தர வடிவேலு, அலை ஓசை ஆசிரியர் வேலூர் நாராயணன், ஆகியோருடன் ஒரே மேடையில் பேசினர். அப்போது மலையகத் தமிழர்களின் பரிதாப நிலையை எடுத்து விளக்கினர்.

திரு. தர்மலிங்கம், 'உரிமைவேட்கை' என்னும் சென்னை இதழுக்கு அளித்திருந்த பேட்டியின் சில முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.

—ஆர்.

கே: தமிழர் ஐக்கிய முன்னணி பொதுவான எந்தத் திர்மானங்களின் பேரில் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது.

ப: தமிழர் ஐக்கிய முன்னணி ஆறு அமசக் கோரிக்கையை முன்வைத்து இயங்கி வருகிறது.

முதலாவது, சிங்களத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் என்ன இடம் வகுக்கப்பட்டதோ அதே இடம் தமிழுக்கும் வகுக்கப்படவேண்டும். (What Sinhalese is to the Sinhalese people, Tamil should be to the Tamil people)

இரண்டாவது, இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கு பூரண பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும்.

மூன்ருவது, இலங்கையின் அரசு மதச் சார்பற்ற அரசாக இருக்கவேண்டும். பௌத்தம், சைவம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய நான்கு சமயங்களையும் சம அடிப்படையில் பாதுகாக்க வேண்டும்.

நான்காவது, சாதி வித்தியாசங்கள் அறவே அகற்றப்படவேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சாதியைப் பற்றி என்ன குறிக்கப்பட்டிருக்கின்றதோ, அதுபோலவே இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இடம் பெறவேண்டும்.

ஐந்தாவது, ஐக்கிய நாடுகள் சபை, அடிப்படை உரிமைகளைப் பற்றி என்ன கூறியிருக்கிறதோ, அந்த உரிமைகளை நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இந்த அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்கள் மூலம் நிலைநாட்டுகின்ற உரிமையும் அளிக்கப்படவேண்டும்.

ஆருவது, அரசியல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, எமது பிரதேசங்களைக் குறிக்கப்பட்ட விஷயங்களிலே நாங்களே ஆளுகின்ற உரிமை (Autonomy) வழங்கப்படவேண்டும்; குறிப்பாக, இந்த ஆறு அம்சங்களை நிறைவேற்ற அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், தனிநாடு கோர வேண்டும் என்ற அபிப்பிராயம் பலருடைய மனதில் தோன்றியிருக்கிறது.

கே: போராட்டம் எந்த முறைகளில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கின்றது?

ப: போராட்டம் அகிம்சை முறையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எங்கள் உரிமைகளை மறுக்கின்ற இந்த அரசை நிம்மதியாக ஆளவிடாமல் தடுத்து பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி செய்து, எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே எங்கள் நோக்கம்.

கே: உங்களின் பிரச்சினையை சர்வதேச நீதிபதிகள் குழு (International Commission of Jurists) எந்த அளவுக்கு கவனிக்கும்? அதனுல் செய்யமுடியும் எனக் கருதுகிறீர்களா?

ப: சர்வதேச நீதிபதிகள் குழு எங்களுடைய மெமோரண்டத்தை கவனத்திற்கு எடுத்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு; இதன்மூலம் வேறென்றும் கைகூடாவிட்டாலும், உலக அபிப்பிராயத்தை எங்கள் சார்பில் இது திரட்டலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

கே: ஐ. நாவில் உங்கள் பிரச்சினையை எந்தமுறையில் எடுத்துச் செல்ல போகிறீர்கள்?

ப: ஐ நாவுக்கு எங்கள் பிரச்சினையை எடுத்துச்செல்லும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கும் என நம்பவில்லை. தமிழனுக்கென உலகில் ஒரு சொந்த நாடு இருக்கும் என்ருல், எங்கள் பிரச்சினை ஐ. நா.வில் நிச்சயமாக எடுத்து விவாதிக்கப்படும். இன்றைக்கு வேறு எந்த நாடாவது இதனை ஐ. நா வில் எடுத்து விவாதிக்கும் என [illegible] நம்பவில்லை.

கே: எந்த வல்லரசு நாட்டின் உதவியையாவது நாடுவீர்களா?

ப: தற்சமயம் அந்தநோக்கம் எங்களுக்கு இல்லை; வல்லரசுகள் எங்களுக்கு உதவி செய்வதானுல், தங்களுக்கு ஆதாயம் இருந்தால் தான் உதவிசெய்யும்.

கே: இலங்கை அரசு சீனவிடம் கொண்டுள்ள உறவு எப்படி? அதனுல் உங்களுக்கு எந்த வகையில் பாதிப்பு ஏற்படும்?

ப: சீனவும், இலங்கையும் மிக நெருங்கிய நண்பர்களாக இருக்கின்றன. அந்த நட்பினுல் சீனவை இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள துறைமுகங்களைக் குறிப்பாக திருகோணமலையைப் பாவிக்கவிட்டு, அதனுல் யுத்தம் ஏற்பட்டால் தமிழ் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள் ஏன்என்ருல், அவை தமிழ்ப் பிரதேசம்.

கே: இந்திய அரசு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் செய்தது என்ன? அது என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

ப: இதுவரை இந்தியா எங்களுக்காக எதுவும் செய்யவில்லை. மலைநாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அவர்களது விருப்பத்திற்குமாருக இந்தியாவிற்குத் தள்ளப்படுவதை இந்தியா ஏற்ருல், அது இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு பெரும் தீமை விளைவிக்கும் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் விஷயத்தில் ஒப்பந்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்சரி, ஒரு மலைநாட்டுத் தமிழ் மகனைக்கூட அவனது விருப்பத்திற்குமாருக இந்தியா ஏற்கக்கூடாது, அப்படி ஏற்ருல் அது மனித அடிப்படை உரிமைகளுக்கு முரணுக இருக்கும்.

கே: இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திடம் எதிர்பார்ப்பது என்ன?

ப: தமிழகம் ஒரு சுதந்திர நாடு அல்ல. இந்தியாவின் அங்கமாகத்தான் இன்றும் இருக்கிறது, எனவே, தமிழக அரசிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை; ஆனுல், தமிழகத்தில்வாழும் தமிழ் மக்களிடமிருந்து அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கிருேம். ஆயுதங்களையோ அல்லது பொருளுதவியையோ எதிர்பார்க்கின்றேம் என நினைக்கவேண்டாம்.

கே: இலங்கைத் தமிழர்கள் சோஷலிசவாதிகளா? சோஷலிச நாடுகளில் உங்களுக்கென ஆதரவைத் திரட்டமுடியுமா?

ப: நான் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சி ஒரு சோஷலிசக் கட்சி. இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு நாங்கள் சமர்ப்பித்த ''மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்''தைப் பார்த்தால், எவ்வளவு தூரத்திற்கு தமிழ் அரசுக் கட்சி சோசலிசத்தில் நம்பிக்கை வைத்துள்ளது என்பதை அறியமுடியும். தமிழ் அரசுக் கட்சிதான் இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் மிகப் பெருங்கட்சியாக சென்ற இருபதாண்டுகளாக இருந்துவருகின்றது.

சோசலிச நாடுகள் எமக்கு ஆதரவைத் தருவதும் தாரா

(7-ம் பக்கம் பார்க்க)

# தியாகச் சுடர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துக்களை நோட்டமிட்டன.

''அன்பு அத்தானுக்கு !

நீங்கள் வாழ்க்கையையே ஒரு பொருட்டாக மதிக்காது எனக்காக அல்லற்படுவதை நினைத்ததும் என்னையறியாமலே என் கண்களிலிருந்து நீர் வடிகின்றன.

உலகத்திலே உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லை. பகட்டாக மற்றவர்களின் கண்களில் ஆடம்பரமாக வாழும் எத்தனையோ நவநாகரீகப் பெண்கள் தங்கள் நிலையிலிருந்து வேண்டுமென்றே தடுமாறி கேவலமாகமற்றவர்களோடு ஒட்டி உறவாடி வெட்கமின்றிப் பழகித் தம் வாழ்க்கையையே பாழாக்குகின்ருர்கள். அப்படிப்பட்டவர்களை இந்த உலகம் வெறுப்பதுமில்லை; வெறுத்தொதுக்க முயலுவதுமில்லை. பணமென்ற பெரிய அந்தஸ்து அதற்குக் குறுக்கே நிற்கின்றது. அது அவர்களைக் காப்பாற்றிவிடுகின்றது.

உண்மையை உரைக்க ஏழை எளியவர்களுக்கு இந்த உலகத்திலே இடமில்லை. அவ்வாறு உரைத்தாலும் மற்றவர்களால் காறி உமிழ்ந்து துப்பப்படுகின்ருர்கள். பக்குவம் என்ற பண்பாடற்ற சமூகத்திலே உண்மைக்கும், நேர்மைக்கும் எங்கே இடமுண்டு. பொய்க்கும் புகழுக்குந்தான் இடமுண்டு.

எனது வாழ்க்கையிலே நான் ஒருமுறை எனது கன்னித் தன்மையே இழந்தவள் தான். இதை நான் என்றுமே மறக்கவில்லை; மறக்கவும் மாட்டேன். இந்த உலகம் மறந்தாலும் இதை எனது உடம்பில் இதயம் என்றெரு பொருள் உள்ளவரை மறக்கவும் மாட்டேன்.

இறைவன் பல வேதனைகளையும், சோதனைகளையும் மனித வாழ்க்கையிலே புகுத்துகின்ருன். இதன் மூலம் பல ,தொல்லைகளும் துயரங்களும் ஏற்படத்தான் செய்கின்றன: இதைத் தடுக்க என்ருலோ அன்றி இந்த உலகத்திலுள்ள பெரிய பணக்காரப்புள்ளிகளாலோ முடியாது.

பணமுடிப்பைக் காட்டி அதன்மூலம் தனது இழந்த அந்தஸ்தையும், குடும்பக் கௌரவத்தையும் காப்பாற்ற முனைகின்ருர்கள் பல பண முதலைகள். அவர்களுக்குக்கூட இந்த உலகத்தில் நல்ல மதிப்புண்டு; கௌரவமுண்டு ஆனுல் அவர்களுக்கும் நிம்மதி உண்டா எனப்பார்க்கும்பொழுது உண்மையில் இல்லை என்றே நான் துணிந்து கூறுகின்றேன்

ஏனென்ருல் அவர்களுக்கும் ஒருமனச்சாட்சி உண்டு. அது எந்தமாதிரியாக இருந்தாலும் அதற்கும் செயலுண்டு. அந்தவகையில் அவர்கள் வெளிக்காட்ட முடியாத அச்செயல்களை யிட்டு அந்த மனம் தொபுல்லரித்துக் கொண்டுதான் இருக்கும்.

அத்தான்! ஏதோ வீணன வார்த்தைகளையெல்லாம் ஏனே விழுந்தடித்து எழுதிக் கொண்டிருக்கின்றேன் எனக் குறை கூறுதீர்கள். சற்று நிதானமாகப் பாருங்கள். என் நெஞ்சின் அடியினிலே மண்டியிட்டுக் கொண்டிருக்கின்ற உண்மை என்ற உணர்ச்சிப் பிழம்பின் செங்கதிர்க்கோடுகள் தான் இவை.

அத்தான்! ''உலகத்துக்குப் பயந்து உண்மையைமறந்து வாழும் வாழ்க்கையைவிட உண்மையை உணர்ந்து மேன்மையாக வாழும் வாழ்க்கையே மேலானது'' என அடிக்கடி நீங்கள் என்னிடம் கூறுவீர்கள். அந்த அருமையான தத்துவம் இந்த உலகத்திலே நிலைபெற்று வாழஎன் இதயபூர்வமான வேணவா.

நீங்கள் எனக்காக இனி எனதயும் சாதிக்கத் தேவையில்லை. சாதிக்கவும் விடமாட்டேன். எனது களங்கமான வாழ்க்கைக்கு மெருகூட்டி என்னை வாழவைக்க நினைத்த உங்கள் செயல் ஒன்றே எனது இதய சாந்திக்குப் போதும்.

மேலும் இந்த உலகத்தில் உங்களையும் கஷ்டப்படுத்தி, நானும்கஷ்டப்பட்டு வாழும் வாழ்க்கையை இனிமேல் ஒரு கணமும் எதிர்பார்க்க என் மனம் துணியவில்லை.

அத்தான்! உங்களை நடுவழியில் தனியாகத் தவிக்கவிட்டுவிட்டு நான் மட்டும் போகின்றேன் எனக்குறை கூறுதீர்கள். இந்த உலகத்தில் பெண்ணுகப் பிறந்ததே பாவம்; அதைவிடப் பெண்ணுக இருந்து, பெண்மையைப் பறிகொடுத்தாளே எனக்கேட்பது அதைவிடப் பாவம்; அதுவும் உண்மையை உணர்ந்த ஆருயிர் நண்பர்களின் வாயிலே நடக்காத நடக்கவும் மாட்டாத கொடூரச் செயல்களைக் கேட்பது அதைவிடப் பெரிய பாவம்.

நான் மட்டுந்தான் இந் நிலைக்குள்ளானுற் பரவாயில்லை. உங்களையும் இதற்குள் இழுத்து, உங்கள் குடும்பத்தையும் கெடுத்து விட்டேன் என்ற சொல் என் இதயத்தை ஈட்டியாற் துளைக்கின்றது. ''கண்கெட்ட உலகத்துக்குக் கண் மூக்குத் தெரியாது; கண்டபடி கதையளக்கும் வம்பர் கூட்டம்'' எனக் கூறுவீர்கள். இதை நான் ஒரு காலத்தில் ஏற்றுக்கொண்டது உண்மை தான். ஆனுல் இன்றைய சூழலில் இதை என்னுல் எப்படி ஏற்க முடியும்.

எந்தக் கதையாக இருந்தாலும் நான் கேட்கத் தயார் அத்தான். ஆனுல் உங்களைக் கெடுத்தேன் என இந்தப் பொல்லாத உலகம் கூறுவதை ஒரு கணமாவது எப்படி பொறுக்க முடியும்?

உங்கள் ஆருயிர் நண்பன் வேலு இருக்கின்ருனே அவனின் பெயரைக் கூறவே என் நாக் கூசுகின்றது. அவன் உங்கள் நண்பனுக இருக்கலாம். ஆனுல் உங்களின் முதல் எதிரி அவன் தான் என்பதை இந்த இறுதிக் கட்டத்திலாவது சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

அவன் இன்று கூறுகின்ற கதையை என் காதாற் கேட்டதும் உடன் எனது நிலையை மாற்றிவிட்டேன். ஒன்ருகச் சேர்ந்து, ஒன்ருகப் பழகி உண்மையை உணர்ந்த நண்பர்களும் இப்படி வாய்க்குவந்தவாறு கூறிக் கேவலப்படுத்துவதாக இருந்தால் இந்த உலகத்திலே உயிருடன் வாழ்வதில் ஏதும் பலனில்லை.

நான் என்னுயிரை மாய்க்கும் இத்திடீர் முடிவுக்கு வந்தமைக்கு யாரும் காரணமல்ல. என்னைப் பெண்ணுகப் படைத்து, பெண்மையைப் பறிகொடுத்தபாவி எனக் களங்கப்படுத்தி, ஊர், உலகம் முழுவதும் சுதந்திரமாக நடமாடமுடியாதபடி பாவியாக்கிவிட்ட இந்தக் கொடிய உலகமே காரணம். இந்தக் கொடிய உலகத்தையும் மிஞ்சி, தன் கொள்கையால் நேர்மையாக என்னை வாழ வழிவகுக்க வந்த என் 'தியாகச்சுடரை' விட்டுப் பிரிவதை நினைத்ததும் என் இதயத்துக்கே சாந்தியில்லை போலத் தென்படுகின்றது: இருந்தும், இந்நிலையில் இதைத் தவிர வேறு ஒன்றும் என்னுல் செய்யமுடியாமைக்கு வருந்துகின்றேன். என் அன்பான இறுதி வணக்கங்கள்.

இப்படிக்கு,

உங்கள் ஆருயிர் காதலி,

ரதி.

கடிதத்தை வாசித்து முடிந்ததும் பாலுவின் கண்களும் செயலிழந்தன. ஆமாம்; இந்தக் கொடூர வாழ்க்கையின் விழிம்பிலே உழன்று அல்லற்பட்டு அழிந்த ரதிக்கு மறுவாழ்வு நல்கத் துடித்த அந்தத் தியாகச்சுடரும் செயலிழந்து இந்த உலகக் கொடுமையிலிருந்து ஒதுங்கிக் கொண்டது.

(யாவும் கற்பனை)

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கின்றது

கெப்பிட்டல்-பிளாசா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ் நகர்)
திரைகளில்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா,
என். எம். நம்பியார்,
எஸ். ஏ. அசோகன்,
நாகேஷ், மனோரமா,
—நடித்த—



ராமன்தேடிய சீதை
(ஈஸ்மன் கலர்)

8வது வாரம்
கிங்ஸ்லி
லிடோ (யாழ்நகர்)

முத்துராமன்,
ஜெயலலிதா,
நடித்தது.

சூரிய காந்தி

2வது வாரம்
செல்லமகால் (கொட்டாஞ்சேனை)
வின்சர் (யாழ் நகர்)

எம். ஜி. ஆர், ஜெயலலிதா
மனோகர், முத்தையா நம்பியார்,
நடித்த

அன்னமிட்ட கை

மற்றும்
நாகேஷ்
மனோரமா
ராமசாமி
கீதாஞ்சலி
பாரதி

இப்பொழுது காட்சியளிக்கிறது

கெயிட்டி திரையில்

- ஜனாதிபதியின் 1970ம் ஆண்டு சிறந்த பட விருது
- பிலிம் பெயரின் ஆண்டின் சிறந்த பட விருது
- சென்னை படரசிகர்களின் விருது பெற்ற


பிரேம் நசீர், செம்மீன் புகழ் ஷீலா,
ரி. கே. பகவதி, டி. எஸ். முத்தையா,
வசந்தா, நடித்த

அக்னி புத்திரி

சென்ரல் (மருதானை) 2.6, 9-30
(சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

ராணி (யாழ் நகர்)
10.30, 2.30, 6.30, 9.30

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.



இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்.

ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா,
தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்

அன்புச் சகோதரர்கள்
(இலவச பாஸ்கள் ரத்து)

விரக்தியேற்படாமல் தவிர்ப்பதற்காக வேளைக்கே தியேட்டருக்கு வாருங்கள்.


இப்பத்திரிகை இலேக் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ... 1974ம் வருடம் மே மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.